REGISTER No. M. 120.

ओं.

JNÂNA BODHINI

A TAMIL MAGAZINE AND REVIEW.

DEVOTED MAINLY TO

LITERATURE, SCIENCE, PHILOSOPHY & RELIGION.

EDITOR:

M. S. PURNALINGAM PILLAI, B.A.,

Professor of English, St. Michael's College, Coimbatore.

Vol. VII. No. 4.—April 1904.

CONTENTS.

		PAGE.
The Japanese	**Editor**	123
A Dialogue on Suicide	**Devadasan**	129
Vedanta Desika	**V. K. Rangacharyar**	133
Chinnatambi—IV	**K. C. Duraiswami**	141
An Elegy on V. G. S	**K. S. Gopalacharyar**	149
Ahalya	**Tirucchittambalam Pillai**	153

EDITORIAL NOTES—Influence of English Education on Indians—The Universities Act—Three Japanese Worthies—Death of Sarabha Sastri—Death of Chidambaram M. Swaminatha Aiyar of Cuddalore—Atma Samrakshini—Sarvajana-mitran—The Three Grand Errors in the History of England—The Tamils Eighteen Hundred Years Ago—The Great Defect in the Educational System of India—The Anniversary of the National Indian Association.

REVIEWS OF BOOKS—Sri Rama Krishna Vijayam—Periyâlwâr Kala Nirnayam—Tirunavukkarasu.

Madras:

THOMPSON AND CO.,

33, POPHAM'S BROADWAY.

1904.

ஞானபோதினி.

வருஷ சந்தா:— [உள் நாட்டிற்கு] ரூ. 2-8-0. புறதேசங்களுக்கு ரூ. 3-8-0 (ஷில்லிங்கு ஐந்து) சந்தாவைப் பத்திராதிபர் விலாசத்திற்கே அனுப் வேண்டும்.

ஞானபோதினி:—இந்த மாதாந்தப் பத்திரிகையின் வருவனவற்றிற்கு மாத்திரமே பதிலாக அனுப்பப்படும்.

1. விவேக சிந்தாமணி—திருவல்லிக்கேணி, சென்னை.
2. மாதர் மனோரஞ்சனி— ஷை
3. செந்தமிழ்—மதுரை.
4. விவேகபாநு—ஷை.
5. சுதேச மித்திரன்—ஆர்மீனியன் தெரு, சென்னை.
6. இந்து நேசன்—மவுண்டுரோடு, சென்னை.
7. இந்து சாதனம்—யாழ்ப்பாணம்.
8. உதய தாரகை—யாழ்ப்பாணம்.
9. ஆத்ம சம்ரக்ஷிணி—சாத்தூர்.
10. திராவிட வர்த்தமானி—சென்னை.
11. The Madras Christian College Magazine, MADRAS.
12. The Indian Ladies' Magazine, MADRAS.

இதனைப் பத்திராதிபர்களும் பத்திராசிரியர்களும் கவனிப்பார்களாக.

ஞானபோதினி

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்—திருக்குறள்.

சம்புடம் **VII.** } **1904**-ம் ௵ ஏப்ரல் ௴ { சஞ்சிகை **4.**

THE JAPANESE.

ஜெப்பானியர்.

ஜெப்பானிராச்சியம் நான்கு பெரியதீவுகளும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட சிறுவுதீகளும் கொண்டது. இதன் விஸ்தீரணமுஞ் சனத்தொகையும் இங்கிலாந்து ஸ்காத்லாந்து என்பவை சேர்ந்த ஐக்கிய விராச்சியத்தினளவேபாம். ஜெப்பான் மலைப்பிரதேசம். நூற்றிற்குப் பன்னிரண்டு பங்கு நிலங்கூடப் பயிராவதில்லை. நாடு அதிக வளப்பம் பொருந்தியிருத்தலால் ஜெப்பானியர் சிறுபண்ணைகள் பல உண்டாக்கி பயிரிடத்தக்க சிறு விஸ்தீரணத்தையும் நன்கு பயிரிட்டுத் தக்க வூதியம் பெறுகின்றனர்.

பூமியதிர்ச்சி ஜெப்பானில் அடிக்கடி யுண்டாகும். இதனால் கேடுகள் பல சம்பவித்துள்ளன. கிராமங்களும் பட்டணங்களும்மலைகளும் திடீரென்று மறைந்துவிடும். சராசரி வருஷத்தில் ஒவ்வொரு நாளிலும் பூமியதிர்ச்சி உண்டென்று சொல்லலாம்.

ஜெப்பான் தேசமெங்கும் அழகான நிலத்தோற்றங்களும் இன்பந்தரத்தக்க இயற்கை வனப்புப் பொருள்களும் அமைந்துள. சுவிட்ஸர்லந்து தேசத்திற்கொப்பான மலைக்காட்சிகளும், வானம் மலை இவற்றின் சாயல்களைக் கலந்து காட்டும் ஸ்படிகம்போன்ற அமைதி

யான ஏரிகளும், பழங்களுந் தானியங்களும் நிறைந்த செழிப்பான பள்ளத்தாக்குகளும் பொருந்தியிருப்பதனால் இந்நாட்டின் அழகு இத்தன்மைத்தென்று சொல்லவும் வேண்டுமோ? இதனினும் கண்ணுக்கின்பங் கொடுக்குநாடு வேறிலது. இதன் வடபாகத்திலெல்லாங் குளிரும் தென்பாகத்தில் எந்நாளுங் கோடையும், இடையிட்ட பாகத்தில் சாந்தோஷ்ணஸ்திதியும் உள.

1868-ம் ஹூ உண்டாகிய குளப்பத்தின் பின்னரே சக்கரவர்த்தி பட்டம் பெற்றனர். நாட்டில் சீர்த்திருத்தங்கள் செய்யப்பட்டன. மேல்நாட்டு நாகரீகங்களும் தொழிற்சாலைகளும் உண்டாயின. வர்த்தகம் பெருகியது. நாடு செழிக்க வாரம்பித்தது.

1889-ம் ஹூ இராச்சியப் பிரமாணம் பயிரங்கப்படுத்தப்பட்டது. ஆளுகை விஷயத்தில் சனங்களுக்கும் பேச வதிகாரங்கிடைத்தது. ஜெப்பான் தேசமும் சட்டதிட்டங்கட் குட்பட்ட அரசனாளுகை பெற்றது. அன்றியும், மாகாணச் சுயவாளுகையும் ஏற்பட்டது. அடுத்தவாண்டில் ஆலோசனைச் சங்கமொன்று புதிதாய்த் தொடங்கிற்று.

1895-ம் வருஷத்தில் சீனதேசத்துடன் நடந்த போராற்றான் ஜெப்பான் விருத்தி உலகத்திற்குப் பயிரங்கமாயது. இதில் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் இந்நாடு செயம்பெற்றபடியால் இந்நாட்டாருக்கு கர்வமும் இறுமாப்பும் மட்டுக்குமிஞ்சி யுண்டாகுமென்று சிலர் பயந்தனர். ஆனால் அங்ஙனம் நேரிடவில்லை. இவர்கள் முகலிலிருந்தே போரில் வெற்றியை எதிர்பார்த்தனராதலின் இவர்கட்கு வெற்றி கிடைத்த காலத்தில் சந்தோஷாவேசமுண்டாகவில்லை. இவர்கள் போர்முடிந்தபின் வழக்கம்போல் தத்தங் காரியங்களைப் பார்த்தனர்.

உடற்கூறுவிஷயத்தில் ஜெப்பானியர் மேனாட்டாருக்குத்தாழ்ந்தவர்களே. ஐரோப்பியரைப் பார்க்கிலும் குள்ளர்கள், கனத்திலுங் குறைந்தவர்கள். உடம்பின் மேற்பாகத்தில்மட்டும் அன்னார் போன்று சிறந்தவர்கள். தலைமுறை தலைமுறையாக தரையிலுட்காருதல் இவர்களுக்கு வழக்கமாதலின் கால்கள் குறுகின. அன்றியும், இவர்களின் நடையுடை பாவனைகளாலும் கந்தமூல ஆகாரத்தாலும் இவர்களின் உடல் வலிகுன்றியது. இவர்களுக்கு வயதுங் குறை; ஜடிதியில் முதுமையு மெய்துகின்றது.

ஆனால் இவர்கள் புத்தியில் தீட்சணிய முள்ளவர்கள், எதையுங் கூறுமுன்னரே அறியும் புத்திபடைத்தவர்கள். கல்லூரிகளிலுள்ள சிறுவர்களனைவரும் அறிவின்மேல் ஆர்வமுடையவர்; அறிவு விருத்தியின் பொருட்டே வருகின்றனர். இவர் கல்விகற்பதில் எத்துணைக் கஷ்டங்களிருப்பினும் அவற்றைப் பொருட்டாகக் கொள்கின்றிலர்.

அதிகாரிகளுக்கும் அரசிற்கும் உரிய கடமைகளைச் செலுத்துதலே ஜெப்பானியரின் முதற்கொள்கை. இதனால் ஜெப்பானியர்கள் அரசருக்கு உண்மை உறுதியுடையவர்களென்பது வெளியாகும். அரசர் நிமித்தம் தந்தை தாய் மக்கள் மனைவியரைக் கொன்ற ஜெப்பானியர்கள் அநேக ருளரென்பதைச் சரித்திரத்திற் காணலாம்.

ஜெப்பான் வடபாகத்தில் பெரும் அலைமோதி ஜலம் வீடுகளிற் புகுந்த தருணத்தில் ஒருவன் ஓலமிட்டு அமிழ்ந்துபோகும் மக்கள் மனைவியைக் கவனியாது அரசர் படத்தைக் காப்பாற்றினன். இவன் இராச விசுவாசத்தை அனைவரும் மெச்சினர்.

வெகுண்டுவரும் ஜெப்பானியக் கூட்டங்களில் சக்கரவர்த்தியின் பெயர் சொன்னல் உடனேகலகம் நின்று அமைதியுண்டாகும். சீன யுத்தத்தில் போர்முனைக்குச் சென்றவர் சம்பளம் பெறாதவரநேகரே. சுயதேசாபிமானம் இவர்கட்கு மிகுதி. இவர்கள் சிறுவர்களாயிருக்கும்பொழுதே தேசாபிமானப் பால் பருகுகின்றனர். தேசாபிமானமில்லாத சிறாரைக் காண்டலரிது.

இவர்கட்குச் சாவென்றாற் பயமில்லை. குடும்பப் பெயருங் கீர்த்தியுமே இவர்கள் கவனத்திலுள. இவற்றிற்குக் காரணம், மனித வாழ்க்கையே கேடுதருமூலம், என்ற புத்தவுபதேசமென்று தோன்றும். போரில் அரசனுக்காக உயிரிழத்தலே வீரம்என்ற கொள்கையுடையராதலின் மேனாட்டார் போன்று சாகப்பயப்படார். இதனாற்றான் ஜெப்பானியர்களுக்குள் தற்கொலை மிகுதி என்று தோன்றுகின்றது, சிற்சில சந்தர்ப்பங்களில் உயிரெடுத்தலே பெருமைவாய்ந்த வீரச்செயலென்ற கொள்கை இவர்கட்குண்டு. முன்னரசாட்சி காலத்தில் கொலைசெய்த வீரனைத் தற்கொலைசெய்து கொள்ளச் சட்டம் விதித்தனர்.

ஜெப்பானில் ஆண்டுதோறும் 7,000 தற்கொலைகள் நேரிடுகின்றன. தற்கொலை செய்வதற்கு அற்பசொற்ப நியாயம் போதும், நெல்

விளைவு குன்றின் தற்கொலை மிகுந்தும், விளைவு மிகுந்தால் தற்கொலை குன்றியும் வருகின்றதைத் தேசவிருத்தாந்தங்களிற் காணலாம். சுகக்குறைவாலும் சூட்டின் மிகுதி பொறுக்காமலும் தற்கொலை செய்பவர் அநேகர்.

ஜெப்பானில் மணமுடித்தல் இந்தியாவில் நடப்பது போன்றே. மணமகனும் மணமகளும் ஒருவரை யொருவர்சந்தித்தல் கிடையாது. கல்யாணப் பக்குவம் வந்த பிள்ளையின் பெற்றோர் பெண்ணைப் பார்த்து வரும்படி ஒருவரை அனுப்புவர். அவர் அங்ஙனம் பார்த்துப் பெண்ணின் பெற்றோர் சம்மதங்கேட்டு அனுப்பியபெற்றோரிடந்தெரிவிப்பர். இருதரத்தாரும் ஒத்துக்கொண்டால் மாப்பிள்ளை பெண் இருவருக்கும் மணவிஷயம் அறிவிப்பர். இவர்கள் ஒருவரொருவரைப் பாராத போதிலும் பெற்றோர் ஆணையைச் சிரமேற் கொள்வர். இதனாற் கேடொன்றும் விளைவதாகத் தெரியவில்லை.

ஜெப்பானியர் சுத்தமுள்ளவர்கள். தினசரி பலதடவை ஸ்நானஞ்செய்கின்றனர். கூலிவேலை செய்பவர்களும் தினந்தோறுங் குளியாதிரார். இவர்களுபயோகப்படுத்தும் வெந்நீரும் சீதோஷ்ணக் கருவியின்படி நூற்றுப்பத்துப் பிரமாண முள்ளதாயிருக்கும்.

ஒவ்வொரு வீட்டிலும் குடும்பமெல்லா மொன்றாகக் குளிக்கத்தக்க பெரிய தொட்டியொன்றுண்டு. இஃதன்றி, பட்டணங்களிலும் நகரங்களிலும் பெரிய வெந்நீர்த் தொட்டிகளுள. அவற்றிற் குளிப்பதற்கு ஒரு காசு கொடுத்தாற் போதும். ஜெப்பானியர் வித்தியாசமன்னியில் ஆண் பெண் சிறுவர் எல்லோரும் ஒன்றாகக் குளிப்பர்.

இயற்கையில் சூடான ஊற்றுக்கள் ஜெப்பான் தேசமெங்கும் உள. இவற்றிற் குளிப்பதாலும் இவற்றின் நீரைப் பருகுவதாலும் உடற்சுகமுண்டாம். இதற்காக ஜனங்கள் ஆயிரக்கணக்காகத் திரண்டு போவார்கள்.

ஜெப்பானியர்கள் மரியாதை யுள்ளவர்கள். இவர்கள் ஒழுக்கச் சிறப்பால் கீழ்த்திசைப் பிரஞ்சுக்காரரெனப்படுவர். இவர்கள் மரியாதையான நடக்கையைச் சத்தியத்தினும் மேன்மையினும் பெரிதாகக் கொள்கின்றனர். பொய்சொல்லுதல், அவமரியாதையாக நடத்தல், இவ்விரண்டினும் எது பாதகமில்லாதது என்று ஜெப்பானியரை

ருவனைக் கேட்பின் பொய் சொல்லுதல் பாதகமில்லை யென்று உடனே விடையளிப்பான். இத்தகைய வொழுக்கம் வெளிவேடம் என்பர் மேனுட்டார். ஏனெனின் தம்போலியரைக் காணினும் பெரியோருக்குரிய உபசாரஞ் செய்தல் ஜெப்பானியருக்கு வழக்கம், ஆங்கிலேயருக்கு வழக்கமன்று. அன்றியும் இந்தியாவில் வழங்குகிறபடி ஜெப்பானிலும் சாதிக்கும் யோக்கியதைக்குந்தக்கபடி உபசாரம் வேறுபடும். ஜெப்பானியர் ஐவர் ஓருவாசலிற் புக நேரிட்டால் ஒவ்வொருவரும் யார் முன் புகுதல் என்று சந்தேகித்துத்தீர்மானியாமற் புகார். வீதியிற் சிறுபிள்ளையைக்கண்டாலும்ஜெப்பானியர் தலைப்பாகையைத் தூக்காமற் பேசத்துணியார்.

மரியாதையான நல்ல நடையும், கல்வி தொழில் ஆராய்ச்சியின் பழும், வாழ்க்கை வசதிகட்கு ஏற்பச் சுகமாக வாழுஞ் சத்தியும், நாகரீக வடையாளங்களெனின், ஜெப்பானியர் நாகரீகமுள்ளவர்களே. இவர்களுக்கு நாகரீக மேற்பட்டு ஆயிரமாண்டுகள் கழிந்தன என்றனர் ஒரு பிரபல கிரந்தகர்த்தா. ஆங்கிலேயருடைய நாகரீகத்திற்கும் இதற்கும் வித்தியாச முளதெனினும், புராதனமாக வரும் இவர்களின் நாகரீகமும் சிறந்து ஒழுங்காக வளர்ந்ததே.

சீனரின் நாகரீகம் வெகு புராதனமானது. உழவு நடாத்தும் வகைகளிலும், அச்சடித்தலிலும், வெடிமருந்து செய்வதிலும், மாலுமியின் திசைகாட்டுங்கருவி யுண்டுபண்ணுதலிலும் சீனர் வெகுகாலமாகச் சிறந்துவிளங்கினர். ஐரோப்பா கண்டத்தின் வடபாகத்தில் ஐரோப்பியர் மிருகங்களைப்போன்று வனங்களிற் திரிந்த பொழுது சீனர்கள் பட்டாடை யுடுத்தி நகரங்களிலும் பட்டணங்களிலும் வசித்து வந்தனர்.

போற்றத்தக்க இவர்களின் நாகரீகம் ஜெப்பான் தேசத்தில் 1868 ம்-ஹுவரை பரவியது. அதன்பின் மேனுட்டு நாகரீகம் அதிதீவிரமாகப்பரவிவருகின்றது. இதைக்கண்டுபிரமிக்காதவரிலர். அந்நிய நாகரீகம் இத்துணை துரிதமாக ஒரு தேசத்திற் பரவியதை உலக சரித்திரத்தில் யாம் வாசித்ததில்லை. தற்கால ஜெப்பானியர்களின் நாகரீகம் ஐரோப்பியரதே ஆயினும் உண்ணாட்டு நாகரீகப் பூச்சு துலங்காநிற்கும். ஜெப்பானில் நான்குமதங்கள் அநுசரிக்கப்படுகின்றன. 'ஷின்று' மதம் ஒன்று. அதன் பதார்த்தம் 'கடவுளர் வழி.' பூர்வத்தில் இயற்

கைப் பொருள்களையும் முன்னோர்களையும் ஆராதித்ததற்கு இப்பெயர் கொடுக்கப்பட்டது. இவ்வாராதனையைப் பற்றிப் புராணகதைகளுமுள. முன்னோர்கள் வணக்கஞ் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது; முன்னோர்கள் தேவர்களாகப் பாவிக்கப்படுகின்றனர். இம்மதத்தின்படி அரசகுடும்பம் தெய்வீகமாக உற்பத்தியானது. ஆதலால் அதற்குப் பணிந்து பூசை செய்தல் ஜெப்பானியர் கடமை. இதனினும் விசேடம் அரச குடும்பத்தில் மறைந்த முன்னோர்களைப் பூசித்தல். அன்றியும், இம்மதச்சார்பினருக்கு சுவர்க்கமும் நரகமும் கிடையா. இடைப்பட்ட பிதிர் ராச்சியமொன்றுமட்டுமுண்டு. இம்மதத்தின் முக்கிய கொள்கைகள்: இராசனை பூசைசெய்தல், மனச்சாட்சிப்படி நடத்தல். ஜெப்பானியரில் பெரும்பான்மையோரும் 'ஷின்ரோ' மதந் தழுவுவோரே.

இதைத்தவிர புத்தமதமும், கண்பூசியஸ்மதமும், டேன்ரிக்கியோ மதமும் அனுஷ்டிக்கப்படுகின்றன.

இராசாங்க சர்வகலாசாலை யொன்றுளது. இது மேனாட்டுச் சர்வகலாசாலைகளை ஒத்து நடப்பது.

ஜெப்பானியர் விசித்திரத் தொழிற்காரர். உலகத்தில் மிக்க வழகுபொருந்திய இந்நாட்டில் வாழும் ஜெப்பானியருக்கு வனப்பின் மேல் ஆசை மிகுதி.

ஜெப்பானியர் ஆட்சி நாள்தோறும் வளர்ந்துசிறக்கின்றது. இவர்களுடைய சட்டங்களும் மேனாட்டார் சட்டங்கள் போன்றே இருக்கின்றன.

ஜெப்பானிய ரெயில்களையும் ஆங்கிலேயர் மாதிரியே போட்டிருக்கின்றனர். அவற்றில் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்களும் வெகு மரியாதையுள்ளவர்கள். முக்கியமானபட்டணங்களுக்கெல்லாம் ரெயில் போடப்பட்டிருக்கின்றது. நீராவிப் படகுகள் மிகுந்து உபயோகப்படுகின்றன. தந்தி ஏற்பாடுஞ் சிறந்ததே. தந்திக்கூலி விகிதங்கள் மற்ற விடங்களிலுள்ளதைவிடக் குறையாம்.

ஜெப்பான் தேசமுழுவதிலும் தபால் ஆபீஸ் இல்லாத கிராமமாயினும் குக்கிராமமாயினுங் கிடையாது. தபாற்கூலியும் வெகுகுறைவு. ஒவ்வொரு தபாலாபீசிலும் ஸேவிங்க்ஸ் பாங்கி (மீந்த பணத்தை வட்

டிக்குப் போட்டுவைக்குமிடம்) உண்டு. அதிலும் நல்ல வட்டி கிடைக்கின்றது.

வேறு பாங்கிகளும் உள. அவை மேனாட்டுப் பாங்கிகள் போன்றே கிரமமாக நடந்து வருகின்றன.

பெரிய நகரங்களில் மின்சார யந்திரங்கள் மிகுதி. ஆதலால் மின்சாரம் அதிக உபயோகத்திலிருக்கின்றன.

கிராமங்களில் வசிப்போர் தொகை மிகுதி. கிராமவாசிகள் கொஞ்சக் காலமாகப் பட்டணங்களில் வந்து சேருகின்றனர். இதனால் தேசத்திற்குக் கேடுவிளையுமோவென்று சிலர் ஐயமுறுகின்றனர்.

சென்ற இருபத்தைந்து வருடங்களில் ஜெப்பானியர் கல்வியிலுங் கைத்தொழிலுஞ் சிறந்து வர்த்தகச் செல்வம் பெற்று யுத்தப் பயிற்சியிற்றேறி நாவாய்கள் துரகபதாதிகளுடன்கரடிபோன்றருஷியர்களுடன் போர்புரியுஞ் சத்திபெற்றனர். தற்காலத்தில் இவ்விரண்டு சாதியருக்கும் நடக்கும் யுத்தமே இருவரின் சிறப்பை விளக்கும். நாளதுவரை ஜெப்பானியர் பின்வாங்கியதாகத் தெரியவில்லை; தரையிலும் நீரிலும் வெற்றிபெற்றன ரென்றே தந்திசமாசாரம். இருவரும் படைதிரட்டிக் கொண்டிருக்கின்றனர். இருவர் படையும் போர்க்குறியாகிய கொரியாவில் வந்து இறங்குகின்றன. கடும்போர் விளைந்தாலன்றி யுத்தமுடிவு பெறாதுபோலும். பெரிய யானையையுஞ் சிறிய எறும்பு கொல்லுமன்றோ?

பத்திராதிபர்.

A DIALOGUE ON SUICIDE.
தற்கொலை வினாவிடை.

முருகன்:—துன்பமில்லாத மனிதப் பிறப்பில்லை. துன்பங்கள் தொகுதியாகவரின் தாங்குதல் கஷ்டம். எல்லாந் தெய்வச்செயலென்று வந்துறும் பல விடுக்கண்களையும் பொறுத்துக் கல்லினின்று நாருரித்தாற் போன்று தீமையினின்றும் நன்மை பெறலே சிறப்பாம். இப்போதனைப்படி நடப்பவர் சிலரேயாம். பொறுக்கக்கூடாத துன்பங்கள் வரின் உயிரை மாய்த்தல் நலமென்றே நினைக்கின்றேன். எனக்கு நாளுக்கு நாள்வருத்தங்க ளதிகப்படுகின்றன. தற்கொலை செய்யலாமென்றாலோ படித்தகல்வி மனச்சலனஞ் செய்விக்கின்றது.

விருதன்:—இத்துணை கஷ்டப்படுவதேன். இறந்தாலென்னை?

மூருகன்:—இந்த யாக்கை யமைப்பு விசித்திரமானதால் அதை யழித்தல் கொடுமையே.

விருதன்:—தும்பி உன்னை விட விசித்திரவமைப்புப் பெற்றதன்றோ?

மூருகன்:—அஃதன்று. மனிதனுக்கு யூகமும் ஒழுக்கமும்விசேடம்;மற்றச் சிருட்டிகளுக்கு இவை கிடையா.

விருதன்:—உனக்குப் பெருமை வாய்ந்துளதோ? நல்லது தும்பி முதலான சில பிராணிகளைக் காட்டினும் நீ சிறப்புப் பெற்றாலும் உலகில் உன்னை விட மேம்பட்ட பிராணிகளுமுண்டே. அன்றியும் கோடிகோடியாகமனிதர்களுளரே. அவர்களில் நீ ஒருவனே. நீகாலஞ்சென்றால் என்னகெட்டுப்போய் விடும். மற்றவர்களில்லையோ?

மூருகன்:—முற்றிலும் ஒரே விதமான பிராணிகள் இரண்டு காண்டலரிது.

விருதன்:—வித்தியாசங்கள் பலவுளவாயின் உன்னால் ஏற்படும் வித்தியாசம் கோடிக்கணக்கில் ஒரு பாகந்தானே. கோடியிலொன்று கழிந்தால் கவனிப்பார் யார்?

மூருகன்:—நீர் இதனை அறிய வல்லீர்.

விருதன்:—உனக்குப் பீடைகளுஞ் சஞ்சலங்களும் மிகுதி; அவற்றைப் பொறுக்குஞ் சத்தியுங் கிடையாது. ஆதலால் சாதலே தகுதி.

மூருகன்:—என்றும் ஒரே மாதிரியாக விருக்காது. இரவொழிந்து பகல் வருதல் தினசரி அநுபவமே. என்னிடுக்கண்களுக்கும் தினகரன் வரானோ? வருவானாயின் இடுக்கண்களைக் களையும் எதுவை இழப்பேனன்றோ?

விருதன்:—என்ன விதங்களில் உன்னுடைய பீடைகளை நிவர்த்தி செய்யப்போகின்றாய்?

மூருகன்:—நான் தற்கொலை செய்தால் வனப்பு மிகுந்த இயற்கையமைப்பை இழக்கவேண்டும். மனித விருத்தி அறிவும் எனக்கில்லாமற் போகும். நான் மறைந்தாலும் ஞானசூனியனாயிருந்தாலும் நடப்பன நடக்குமே.

விருதன்:—இது தெரிந்திருந்தும் நீகிலேசப்படுவதேன்?

மூருகன்:—மனித விருத்திக்கு முடிவு கிடையாது. நான் உயிர் விடாதிருந்தால் அதிலொரு பாகத்தையாயினும் பார்ப்பேனன்றோ?

விருதன்:—மனித விருத்தி நத்தைபோல் நகரும். ஆயிரமாண்டுகள்கழிந்தாலும் விசேஷவிருத்தி காணுதலருமை. அங்ஙனமாயின் உன்அற்பவாயுளில் என்ன விருத்தியைக் காணப்போகிறாய்? தவிரவும், உனக்கோ உடற்பீடை

கள் பல, மனப்பீடைகளுக்குக் கணக்கில்லே. இப்படியிருக்கும் பொழுது நீ மனுேகற்பிதஞ்செய்யும் விருத்தியை எவ்வாறு காணப்போகின்ருய்?

முருகன்:—கஷ்டங்களேப் பொறுக்காமல் உயிரை விட்டேனுனல் என்னேக் கோழையன் என்பார்களே !

விருதன்:—நீ சாகப்பிரியப்பட்டும் சாகாதிருந்தால் அது கோழை யாகாதோ ? இருவழிகளில் நீ கோழையன். வாழ்க்கைத்துன்பங்களேப் பொறுக்குமியல்பில்லாத நீ உயிரையும் விடமாட்டாய். ஏனெனில் ஜனங்களின் நிந்தைக்கு நீ பின்வாங்குகின்ருய்; உன்னே நேசிப்பார் ஒருவருமில்லே. உலகத்தில் உனக்கு அற்புத்தனேகள் கிடையா. நீ மற்றவர்களின் நிந்தையைப் பொருளாக மதிக்கவேண்டிய நிமித்தமொன்று மில்லே. உலகத்தார் உன்னே நிந்திக்கவுமாட்டார்கள். உன்னே நினைக்கவுமாட்டார்கள்.

முருகன்:—உலகத்தார் என்னே மறந்துவிடுவார்களென்றதனுல் நான் மறைய நியாயமில்லே. அவர்கள் மறவாதிருக்கும்படி நற்காரியங்களேச் செய்தலே என்னுடைய கடமையாக ஏற்படும். அங்ஙனமாயின் உயிரைக் காப்பாற்றுதலே நன்மையாம்.

விருதன்:—வாலிபருக்கு இக்கனுக்க ளூரியன. வயது முதிர முதிர இவை சூரியனேக்கண்ட பனிபோல நீங்கும். ஆதலால் இக்கனுக்களே ஒழித்தலே தகுதி. மனிதனுல் விசேஷமாய் ஒன்றை நினைக்கவுஞ் செய்யவு முடியாது. வாழ்க்கையின் முடிவு மோசம்போதலே. சாதலே தக்கமருந்து.

முருகன்:—மனிதன் எதையும் அறிந்து செய்யவும் வல்லமையுள்ளான் என்பது திண்ணம். ஏனெனில் அற்புதங்களே அறிந்து செய்த பெரியோர்கள் இருந்திருக்கின்றனர்.

விருதன்:—இருந்திருக்கலாம்; அவர்கள் அங்ஙனஞ் செய்ததாக நினைத்திருக்கலாம்; சிலர்மனப்பாக்கிய முளர். அவர்களுடைய மனப்பாக்கியத்திலிருந்து இத்தகைய மனுேபாவனேகளுண்டாயிருக்கலாம்.

முருகன்:—இந்த வாழ்க்கை கெட்டது. இதை யொழித்தேனுயின் அடுத்த வாழ்வு சிறந்திருக்குமென்பது என்ன நிச்சயம். இதனினுங் கேடாயிருக்கலாம். இங்குள்ள கஷ்டங்களேவிடப் பன் மடங்கு ஜாஸ்தியாயிருக்கலாம்.

விருதன்:—இறந்துபோனவர்களில் எவர்களேனும் புதிதாக உயிர் பெற்று வந்திருக்கின்றனரென்று கேட்டிருக்கின்ருயோ?

முருகன்:—இறந்தோர் எழும்பார் என்று உம்மால்நிலே நாட்டமுடியாது. வெளித்தோற்றங்ளால் இறந்தவர்எழும்பார்எனநினேக்கஎதுவுண்டு. ஆயினும் மனிதன் எண்ணத்தில் பரம ரகசியமான புதைபொருள் ஒன்றுண்டு. அது என்றும் நிலே பெறுவது. மனுேரதியம் ஒன்றுளது. அதை இவ்வுலகில் கா

மகாமகோபாத்தியாய
... வே. சாமிநாதையர்

ணுவார் இலர். உலகெங்கும் பார்த்தால் தேவ தச்சன் ஒருவனுளன் என்றும், தேவ காரியம் ஒன்றின்றி உலகம் அமைக்கப்பட்டிராது என்றும் தோன்றும். ஒவ்வொரு மனிதனும் தன்னிழி சுபாவத்தை யொழித்து உயர்ந்த குணம் பெறவே முயலுகின்றான் என்பது வெளியாகும். மனத்திற்குத் தோன்றும் ஐயங்களைத் தீர்க்குமிடமொன்றிருத்தல் வேண்டும். மனத்தில் ஜெனிக்கும் சங்கைகளைத் தீர்க்குந் திறமையோ வுமக்கில்லை. எனக்கு ஒரு சமுசய முண்டாகின்றதென்றால் வேறொரு சந்தேகத்தை நீர் கிளப்புகின்றீரே யொழிய ஜெனித்த சங்கையைச் சங்காரஞ் செய்யும் சத்தி பெற்றீரல்லீர். உம்முடைய விவகாரத்தால் என்னிருமன மொருமன மாவதில்லை. ஐயங்களைக் கிளப்பி என்னை வாதித்தீர், வேறு ஐயங்கள் கிளம்பி அவற்றிற்பட்டு நீர் மாய்கின்றீர்.

விநதன்:—உனக்கு உற்பத்தி யுண்டென்று நீ ஒத்துக் கொள்வாய். சூனியத்தினின்றே நீ யுண்டானாய். சூனியமாக முடிவதில் என்னதடை?

முருகன்:—உற்பத்தியானதெல்லாம் முடிவு பெறுகின்றது என்பதை முதலில் நீர் உறுதிப்படுத்தவேண்டும். உண்டென்று நான் ஒத்துக்கொண்டபோதிலும் இப்பிறப்பிற்றான் என் சீவன் பிறந்ததென்று நீர் எங்ஙனஞ் சாதிப்பீர்? ஒவ்வொரு பிராணியும் பல்வகைப் பிறப்புக்களையடைந்திருக்கலாம்.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்ச்
செல்லாஅ நின்ற வித்தாவர சங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்"

என்று எம்பெருமானிடம் மாணிக்கவாசகர் முறையிட்டனரன்றோ? எனக்கு முந்திய பிறப்பு இன்னதென்று ஞாபகமில்லை. பிறப்பு வேறுபடுதலால் மறதியுண்டாகலாம். நமக்கு ஆவேசம் வந்தகாலத்தில் நாம் இன்னதெண்ணினோம் என்று நமக்குத் தெரிவதில்லை. கனவு காண்கின்றோம், அது மறைந்துவிடுகின்றது, நாமும் அதை மறந்து விடுகிறோம். திரும்பவும் பரவசப்படுங் காலத்திலும் கனாக்காணுங் காலத்திலும் மறைந்தவை தோன்றுகின்றன. முந்திய பிறப்பை நான் மறுபடி எய்துவேனாயின் அதைப் பற்றிய ஞாபகமெனக்கு உண்டாகலாம். முந்திய பிறப்பு சிறந்ததாகவிருக்கலாம். அதனின்று இழிந்த நிமித்தத்தால் இப்பிறப்பிலும் மேலான எண்ணங்கள் எனக்கு உண்டாகின்றன போலும். கீழ்த்தரமான பிறப்புக்கள் பலவற்றை நான் கடந்து மேலான பிறப்பை இப்பொழுது பெற்றிருக்கும் நியாயத்தால் முந்திய பிறப்பை நான் மறந்திருக்கலாம். தவிரவும் நான் உடம்பெடுக்காத சத்தாயிருந்து ஞாபகவுணர்ச்சிக்கே யிடமில்லாதிருக்கலாம். சீவன் பொருளுடன் பரிணமித்த காலத்தில் ஞாபகத்திற் கிட

முண்டு. இவை யன்றியும், முற்பிறப்பைப் பற்றிய ஞாபகங்கள் சில வுண்டாகின்றன. இதனால் இப்பிறப்பில் நான் புதிதாகப்பார்க்குஞ் சில பொருள்கள் பழையன போல் தோன்றுகின்றன. 'எங்கேயோ இதைப்பார்த்திருக்கின்றேன்; எப்பொழுதோ இதைச் செய்திருக்கின்றேன்' என்று ஞாபகம் வருதல் பூர்வ வாசனை யென்று கொள்ளவேண்டும்.

விநதன்:—எனக்கு நகைப்புண்டாகின்றது. உன்னுடைய சொப்பனங்களைப்பற்றி நான் உன்னுடன் வாதஞ் செய்யவில்லையே, நீ படுந் துன்பம் வாஸ்தவமாதலால் உயிர் விடுவதற்கு அது உனக்குப் போதுமானதே.

முருகன்:—வாஸ்தவம். ஆனால் உம்முடைய நியாயம் பிழைத்தது. நீர் வைத்த குறியுந்தவறியது. உம்முடைய போலி நியாயங்களால் நான் தற்கொலை செய்யா திருந்ததே விசேடம். நமக்குக் கஷ்டமான காலங்களில் நாம் தற்கொலை செய்ய நினைத்தாலும், ஜீவபிராணிகளிலெதுவும் மாண்டு போகப் பிரியப்படாது. நிறைந்த வாழ்வும் உயர்ந்த பதவியுமே மனிதர் விரும்புவர். ஆதலால் தற்கொலை செய்தல் அவிவேகம், கோழைத்தனம், நிந்தைக்கிடம். கஷ்ட திசையில் ஈசனடி போற்றலே பிணி தீர்க்கு மருந்து. இவ்விஷயத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்ய விருப்புவிரேல் ஜெகப்பிரியராகிய ஷேக்ஸ்பியர் ஆக்கிய ஹாம்லெற்று என்னும் நாடகத்தில் மூன்றும் அங்கம் முதற்களத்தையும், அடிஸன் வரைந்துள்ள கேற்றோ என்ற நாடகத்தின் ஐந்தாம் அங்கம் முதற்களத்தையும் வாசிப்பீராக.

தேவதாசன்.

VEDANTA DESIKA.

வேதாந்த தேசிகன் வைபவம்.

(65-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்னொரு பகல் பிள்ளை பண்டுபோல் உபாதானத்துக்குச் செல்லாநின்றுழி, சில்லோர் பத்தியின் மேம்பாட்டால் பிள்ளை யறியகில்லாது அரிசியோடே தனங்களையுங் கலந்து அளிக்க, வாக்கி யங்ஙனே யவைகளை யேற்றுக் கொடுபோய்த் தம்மில் லக்கிழத்திபாலீந்தனர். அவ்வளவையுமேற்ற பன்னியார் அரிசியைச் செவ்வனே யாய்தருங்காலத்துப் பல தன்ங்கள் கலந்து கிடப்பதை நோக்கினளாய்க் கொழுநருக்குக்காட்டி 'யீதென்ன' வென்றனள். பிள்ளை:—அவைகளின் வரவைப் பரியாலோசித்துப் புழுக்களைமான வுன்னி யவைகளைக் கோட்டினு லோர் புறம்பே தள்ளிக்கண்டோ ராவலிக்க மோனியாயினர். இஃதிருக்க, மற்றொரு நாள் அழகியமணவாளப் பெருமாள் நயினர் தம்முன்னோன் மொழியையுங் கொள்ளாது ஈரிஷைவினால்

தாமியற்றிய **ஆசார்ய ஹ்ருதயம்** என்னும் நூலை நம்பிள்ளைபானீட்டி யிஃதே பூர்வாசாரியர்களுடைய திருவுளம்; நீவிரியற்றியுள்ள நூல்களனைத்தும் இன்னதற்கு மாறுபட்ட அப்ரமாணங்கள் புதைந்துள்ளன. அங்ஙன மன்றென்பீரேல் நம்மொடு வாதிட்டு உரிய ஸமாதானஞ் சொல்லும்; அஃதுமின்றேல் நீவிர் அடைந்துள கவிதார்க்கிகஸிம்மத்வாதி பிருதுகளை நீத்துவிடும், என்ன நிர்ப்பந்தித்தனர். அதனைச் செவிமடுத்த நிகமாந்தாரியர் புன்முறுவலெய்தி, "ஸ்வாமிந்! எம்பெரிய பிருது நுங்கருத்தினுக் கிசையவில்லையேல் அன்னதைத் தாமே எற்றுக்கொள்ளலாம். வீணில்வாதமெற்றுக்கு?" எனக்கடாவிடை தந்து நிற்க, பேரருளாளஜீயர் முதலானோரும், மற்றுமுள்ள ஸ்ரீவைணவக்குழாமும், 'நயினார் கருத்துப்படி நிகழ்த்தி யன்னார் செருக்கினையடக்குவதே மேதக்க' தெனப் பிள்ளைபால் பகர்ந்தனர். வாக்கி 'ஆயினங்ஙனே யியற்றுவ' லெனப் பெரியாராணையைக் கடவாது நயினாரை நோக்கி வம்மின், பெரியீர்! நீவிரியற்றிய பனுவலில் இன்றியமையாத தொன்றினையியம்பவேண்டுமென்ன, நயினாரும் ஸ்வதந்திரரான எம்பெருமான் றனது நிர்ஹேதுக கிருபையாலேயே பரமபுருஷார்த்தம் ப்ரஸாதிக்கிறு னாகையால் சேதனனுக்குக் கர்த்தவ்யமான தொன்றுமில்லை. ஆதலால் 'பிரதிபத்தி' யென்பது உபாயமாக மாட்டாது. இன்னணமல்லாத போழ்து "வறிதே யருள் செய்வர்" "இன்றென்னைப் பொருளாக்கி" என்றவேனைய அருளிச்செயல்கள் விரோதிப்பதுமன்றி சேதநரூபமான பாரதந்திரியமும், எம்பெருமானுடைய ஸ்வாதந்திரிய் காருண்யாதிகளும் பாதிதமாகும்-என்றிவ்வார்த்தையை யெடுத்து வெகுவாய் உபந்யாஸித்து நின்றார். தேசிகரவைகளைக்கேட்டு ఉపాయస్స్వప్రాప్తైరుపనిషత్ என்ற சுலோகத்தாலே அவ்வினாக்களுக்கெல்லாம் முறையே விடைகடாவி ஆகமசாத்திரங்களாலும், பெரியாரருளிச்செயல்களாலும், ஆசாரிய ஸ்ரீஸூக்திகளாலும் பலவாய் மேற்கோள்களோதி யேற்றவணம் நன்னீதிகளை நிரூபித்தனர். அவைகளின் தாத்பர்ய ஸாரங்களை யீண்டு வரைகின்றாம்:—

எம்பிராற்குக் கருணை (யெழல்) இயல்பாதலால் அன்னது ஸ்வரூபத்தில் 'நிர்ஹேதுக' மென்னப்படும் ஆயினு மதன் ப்ரவிர்த்தி ஓரநுட்டான விசேடத்தினைக்கொண்டே யாகலான் அன்னது 'ஸஹேதுக'மேயாம். ஆயதால் சேதநனுக்கு புருடார்த்தத்தைக் குறித்து கர்த்தவ்ய மொன்று விதித்தமாயிற்று. இவையெலாம் கருணாலயனான ஸ்ரீமந்நாராயணனது ஆக்ஞாரூபமான சாத்திரத்தின்கணுய்ந்து உணரற்பாற்று. இன்னணமில்லையேல், பெருங்கருணையா லெம்மண்ணல் வாசுதேவன் சாத்திர விளக்கை யீந்தானென்பது வீணேயாம். இதனாலேயே வர்ணாச்சிரமாதி எனைய அறங்களனைத்தும் சேஷனான சேதனனுக்கு சேஷியுக்த கைங்கரியங்களாய் அவசியம் அனுபவிக்க வேண்டியவையாகின்றன. சேதநபாரதந்திரியமும் இதனா

லேயே நிலைகொள்ளும். ஆகவே, பரம புருடார்த்தத்தைக் குறித்து நம்பெருமான் உபாயமாகவும், ப்ரபத்தி முதலியன அவனது ஈகைக்கு உபாயமாகவும் விளம்பப்பட்டு அனைத்துப் பிரமாணங்களினும் பொருந்தி நிற்கும். இன்றேல், ஸர்வமுத்திப்பிரஸங்கமும் எம்பெருமானுக்கு வைஷம்யநைர்க்கிருண்யம் புகல்வதும் பரிகரிக்கப்படாமல் ஸ்ரீபாஷ்ய கத்யாதி யர்த்தங்களும் ஆசிரியர்களனுட்டானமும் கலங்கி நிற்க வரும். எம்மண்ணல் ஸர்வதந்திரனுயினும் கருணையாலேயே அநாதியான ஸம்ஸாரப்தியில் மூழ்கித் திளைத்து வரும் ஆன்மாக்களிடத்தில் கண்ட ஓரற்ப சுகிருதத்தை முன்னிட்டே மேன்மேலு மவரை யபிவிருத்தராக்கி மோக்ஷோபாயத்தில் மூட்டித்திருவுளம் பற்றுகையாலே 'அன்னது மவனது இன்னருளே' என்று அறைந்தனர். இவைகடாம் நந் தூப்பிற்பிள்ளை யருளிய அர்த்தஸாரங்கள். விரிக்கிற் பெருகுமென இம்மட்டோடு நிறுத்தினேம். விழையுநர் தத்தம் ஆசிரிய சிகாமணிகள்பாற் கேட்டுத் தெள்ளிதி லுணர்ந் துய்வார்களாக.

அங்ஙனம் விவரமோடருளிய நிகமாந்தாரியரின் உபந்யாஸத்தைக் கேட்டு நயினர், பெருமனச் சமாதானத்துடன் மேலொன்று மியம்பற் கேலாது தலை குனிந்து நிற்க,—அவையினராரும் பெருமகிழ்வொடு "வாக்கியினருளான் மறைமெய்ப் பொருள்களை—தேக்கம ழமிழ்தெனத் தெள்ளிதிற் பருகினேம்" என்னக்கிளத்தி முன்னிலும் பிள்ளைபாற் பிரதிபன்னராயிருந்தனர். நிற்க, முறையே உடனிருந்து செவியேற்றுவந்த பிள்ளைலோகாசாரியரும் பொருராய் பிள்ளையைக்கண்டு நீவி ரறைந்துள்ளபடியே யோசனு பேதமேயல்லாது அர்த்தபேதமில்லையென்று வாளாவழுத்தி வந்தனர். மானம் பட்டதை மதிக்கிலா நயினர் பிறகும் ஓர்நா ளந்தியில் அழகிய மணவாளன் திருவோலக்கத்தில் வந்து குழுக்க ளுப்பண் குலவிடும் வேதாந்த கோளரியைக் கூஉய், சென்றனயாவுஞ் செல்க, இன்றிரவு விடிவதற்கு முன் பெருமான் விடயமாக ஆயிரஞ்சுலோக மாசுகவியாப்பாடித்தருவோர்க்கே 'கவிதார்க்கிகஸிம்மம்' என்று பிருது விளம்பக்கடவதென, அங்ஙனே நம்பெருமானும் அதற்கியைய ஓரர்ச்சகமுகத்தா னவ்விருவர்க்கு மாணையிட்டருளினர்.

தங் கருத்துக் கியைய நம்பெருமானுஞ் சாற்றினனே யென்ற பேரவாவால் நயினர், தூப்பிற் பிள்ளையை நோக்கி (யாவருங்காண) 'அடிகாள்! யாமின்றிரவுக்குள் (எம்பிரானது) **பதகமல ஸஹஸ்ரம்** என்றொரு நூலைப் பாடிக்கொண்டு வருகின்றோம்; தாமெந்நூலைப் பாடித்தருமோ?' என்ன, வேங்கடநாதாரியர்: 'ஸ்வாமிந் ! யான் **பாதுகாஸஹஸ்ரம்** என்றொரு நூலையியற்றிக் கொணர்வல்' என்றனர். நயினர் 'நன்' றென்றியம்ப யாவருமவணித்து அருஞ்ஞேயத்தை நிரீக்ஷித்துக்கொண்டிருத்தலும், பண (பந்தய)த்தொடு சென்ற நயினர் தாங்கூறிப் போந்தபடியே அன்றிரவெலாம் வாளா விழி

த்துக் கூறிவந்த நூலை மிக்க வருத்தத்தொடு உனாற்றிவருங்கால், முந்நூறு சுலோகங்களைப் புனைவதற்குள்ளேயே கதிரவன் குணதிசையிலெழுந்து விட்டனன். ஐயகோ! நயினாரென் செய்வர்? வாளா வெள்கினர். மற்றுத் தேசிகமணியோ கூறியாங்கு மாளிகை யெய்தி முதல்யாமத்தில் நித்தியக் கடன்களை முறையே செவ்விபெறவாற்றி, இரண்டாவது யாமத்துள் பாது காஸஹஸ்ரத்தைப் பாடித் தலைக்கட்டி, மூன்றாவது யாமத்தில் பண்டையே போல் திருக்கண் வளர்ந்து, நான்காவது யாமத்தில் எழுந்து செய்கடனாற்றி உதயமாய பின்னர் கிருதகிருத்யராய் நம் அழகியமணவாளன் திருவோலக் கத்தில் நிரீக்ஷித் தடைந்திருக்கும் பல்லோர் முன்னின்றனர். இவ்வாறே எழ வேண்டிய முதல்வைசம்யரான நயினார்நாணத்தால் வாராதொழிய, யாவரும் ஒருங்குசேர்ந்து நயினாரை யாண்டழைத்துக் கொடுபோய் நிறுத்தி யிருவர்தம் ஆயிரஞ்சுலோகங்களையு மறையும்படி பெருமான் முன்ன ராணையிட்டமாத் திரத்து நயினார் தஞ்செய்கை முற்று மேலாததை யுள்ளியுள்ளி நாணமெ ய்தலும், பிள்ளை தாம் அஸஹாயேந வியற்றிய பாதுகாஸஹஸ்ரத்தைப் பெருமான் முன்னிலையில் இயம்பி நிற்கப் பெருமான் பெரிது முவந்து அர்ச்சக முகத்தால் பிள்ளைக்கு "கவிதார்க்கிகஸிம்மம்" எனப் புதுப்பெய ரொன்றருளிப் பல வரிசைகளையு மீந்து சாலவும் மேம்பாடெய்துவித்தருளி னார். தேசிக ரவைகளையேற்றாராய் பெரிதுமுவந்து பண்டையோரல்லாது பெருமானுங் கொடுத்தருளிய கவிதார்க்கிகஸிம்மமென்ற பெரும் பெய ரினை யுன்னிச் சாலவும் வியந்து கொண்டாடி நயினார் திருவுள முவக்குமாறு సారేసారాయసతి என்று நைச்சியானுஸந்தானம்புரிய அன்னதைக் கண்ட மேதாவியரும் பெரிதும் மகிழ்ந்தனர். முறையே தேசிகர் "இராமாநுஜ மதஸித்தாந்தத்தில் எவரும் அஸூயையாலே கெடலாகா" தெனவியம்பி ఆపాదచూడమనపాయ என விண்ணப்பித்து பண்டையேபோல் நிருபத்ர வத்தொடு ஸித்தாந்த ப்ரவசனகிருதரா யிருந்தனர். நிற்க, நயினாராதி யோருந் தஞ்செய்கை வெறுத்து உய்யற் கிடமில்லை யென மனநொந்து தே சிகர்பால் தோமில் ப்ரவணராயிருந்தனர்.

பின்போரிரவில் நம்மாழ்வார் கவிதார்க்கிகஸிம்மத்துக்குத் தஞ்சே வை யீந்தருளிச் சில்லாக்ஞை புரிந்துபோக, விடிந்தவாறே பிள்ளை யன்ன வாணையை நிகழ்த்தித் தலைக்கட்ட வேண்டுமென்றுள்ளி (திருவாய் மொழி யில்) பிள்ளான் ஆயிரப்படிக்கு யப்புள்ளார் அர்த்தத்தை யுபந்யஸித்தபடி யொரு வியாக்யாநம்புரிய வெழுந்து, அதனாரம்பத்தில் நாலாயிரப்ரபந்தங் களிட தாத்பர்யத்தை யுபந்யஸித்துப் பின்பு திருவாய்மொழியர்த்தத்தைப் பரக்கப் பிரதிபாதித்து நூலை முடித்து, அதற்கு **நாலாயிரக்கருத்** தென்றும், **நிகமபரிமளம்** என்றும் பெரும் பெயர் சூட்டி, கீர்வாணத்தில் **த்ரமிடோப நிஷத்ஸாரம்** என்றும், **த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவலி** யென்றும் இரண்டு நூல்களை யியற்றி செந்தமிழ்ப் பாக்களால் **திருமந்திரச்சுருக்கு, த்வ**

யச்சுருக்கு, சர்மச்லோகச்சுருக்கு, கீதார்த்தஸங்க்ரஹம், ஆகாரநியமம் ஆகிய எனைய கிரந்தங்களையுஞ் செய்தருளி யவைகளை முதலிகளுக்குப் பிரஸாதித்துக்கொண்டு நம்மாழ்வார், நாதமுனிகள் ஆதியோரது நியமனங் களை முடித்து அவர்கள் உள்ளத்தினையு முவப்பித்துக்கொண்டுவந்தனர்' மிற்க,

ஒரு பகல் நிகமாந்தாரியர் பெரிய பெருமானை யமலனாதிப்பிரான்படி யே திருவடி முதல் திருமுடி பரியந்தம் அனுபவித்து ஆதரம் பெருக வைத்த வழகிலே யீடுபட்டு ,அவ்வநுபவத்தை ॰ம்ஶீபூ॰—ஜீ: என்றுதுவக்கி **த்யானசோபான** மென்றோர் ஸ்தோத்திர மருளிச்செய்ய, பெருமான் பெரிதுங் களிப்பெய்தி வாக்கியை நோக்கி 'நீவிர் நம் பாணனே டொப்பீர்' என் றர்ச்சகமுகத்தா னியம்பியதைஜீயர் முதலான முதலிகளும் ஸ்ரீவைண வர்களும்"எம்பெருமானுடைய திவ்யமங்கள விக்ரஹம் அடியேங்களுடைய மனத்திற் பதியும்படி திருப்பாணாழ்வார் அருளிச்செயற்கு ஒரு வியாக்கியா னம் செய்தளிக்க வேண்டுமென் றிரங்கத் தேசிகரங்ஙனே யமலனாதிப் பிரா னுக்கு **முனிவாஹனபோதம்** என்றொரு வ்யாக்கியானஞ் செய்தீந்தனர்.

மற்றொரு நாள்,

" துன்புற்ற மதுரகவி தோன்றக் காட்டுந்
தொல் வழியே நல்வழிக டணிவார்கட்கே''

என்றவணமே பிரபத்தியின் முகபோதமான ஆசாரிய நிஷ்டையின் வைபவத்தைக் கணித்துக் 'கண்ணினுண் சிறுத்தாம்பு' க்கு **மதுரகவிஹ்ருத யம்** என்று ஒரு நூலியற்றினர்.

மற்றோர் காலத்தில் நிகமாந்தாரியன் முண்டகத் தாட்களாலே திருத் தப்பட்டோனாய் பரமேகாந்த தர்மத்தில் ஊற்ற முடையோனாயிருந்த ஸர் **வஜ்ஞ சிங்கப்பநாய்க்கன்** என்பான் அநந்தஸூரி ஸூநுவை யஞ்சலித்து வரல்வேண்டு மெனும் எண்ணங் கொண்டானாயினும் அரசதர்மத்தின் நிர்ப் பந்தத்தால் பரநாடு செலற்கு ஒண்ணாதிருந்தமையால் சில ஸ்ரீவைணவர்களை யனுப்பி தனக்கு விசேடார்த்தங்களை பரக்கச் சாதிக்கவேண்டுமென்றிரக்க, பிள்ளை யன்னானது சித்தசுத்தியை யோர்ந்துஹிதோபதேசமாக ஸுபாஷிதநீ வி, **தத்வஸந்தேசம், ரஹஸ்ய ஸந்தேசம், ரஹஸ்யஸந்தேசவிவரணம்** ஆகிய ஏனைய அரிய நூல்களைச்செய்தருளி யீந்து ஸத்யேஸ்தாவ்யூ ப்ரஹ்ம என்ற சுலோகத் தால் சில்லறங்களை நியமித்து விடுக்க, அச்சர்வஞ்ஞ நாய்க்கனுவான் பிரு தனைத்தொடும் எதிர்கொண்டு கிருபத்தை யேற்றுப் போற்றி யுய்ந்தானாய்ச் சாலவும் தேசிகமணியின் திருவடிப்போதுகளில் மாறாப்பத்தியுடையவனாய் வதிந்தனன். இன்னணம் ஆஸேது ஹிமாசல பரியந்தம் படர்ந்த சீர்த்திய ராய், பகவத் பாகவதாசாரிய பரிபூரண கடாக்ஷ பாத்ரராயிருக்கிற நிகமாந்த

கோளரியின் கனவில், அருளம்புதியான பேரருளாளன் ஶ்ரேன்றிப்பிள்ளை யை நோக்கி, "நமக்கு நம்முடைய அம்சமாய் ஒரருங்குமர னுதிப்பன்; அன்னுற்கு நமது நாமத்தினையே நாமமாச்சாற்றி யமைத்திடல் வேண்டு" மென்றறைந்து கரந்தனர். அற்றைநாடொட்டுத் தேவியாரும் சூலெய்தி முறையே சர்வ இலக்கணங்களுமமைய மாதபூர்த்தியாய் **நளவாண்டு ஆவணி மதி உரோகணி யுடுவில்** ஒரு குமரரைப் பெற்றனர். ஈன்ற குமரற்குத் தந்தை தேசிகனுர் ஜாதகருமமியற்றி **வரதன்** என நாமகரணமிட்டு அக்ஷராரம்பம்புரிந்து, முறையே வேதாந்தம் சாத்திரம், திருமந்திரார்த்த மாதியவைகளைத் தாமாக் கற்பித்து வந்தனர். பேரருளாளன் அம்சமாகையால் வரதாரியர் பலரும் வியக்க அதிமேதாவியாய் நிகமாந்தத்தில் அதிநைபுண்யத்வமடைந்து அகில விசேடார்த்தங்களையும் கரதலாமலகமெனக் கிரஹித்து தந்தையின் விடயமாக, శ్రీమాన్వేంకట నాథార్యః కవితార్కిక కేసరీ । వేదాంతాచార్యవర్యో మే సన్నిధత్తాం సదా హృది என்றொரு தனியனையருளி யன்னதை முன்னம் பேரருளாள ஜீயர் விண்ணப்பித்த నమః పదమిదం బ్రూయాత్తస్మై వేంకటసూరయే. என்னுந் தனியனேடு சேர்த்து அனுஸந்திக்க, அதைச் சுதர்சன பட்டராதிய பெரியோர்களும் சொற்று "இன்னது எதனினும் அரியதே" என்றுஹ்லாதிக்க, கேட்ட ஜீயர்: "இற்றைமுதல் இத்தனியனையே அனுஸந்திக்க ஆணையிட்டருளல் வேண்டு" மென்று நம்வாக்கிபாலிரந்து சாலவுங் கட்டளை யெய்தி யன்னதையே மனனித்துக்கொடு-முன்னம் ஆழ்வான் முதலானுர் பிள்ளானிடத்துப் போல அன்ன வரதாரியனிடத்தில் அதிப்ரவணராயினுர்.

பிற்றையோரமயத்தில் நம்மருமந்த வாக்கி கிரந்தாவலோகநம் புரியாநிற்புழி, அன்ன வீதிவழி கந்தாடை யிலக்ஷ்மணுசாரிய ரென்பார் தனுது பல மாணவர்களுடனே போதர, அன்னவர் செல்வதை யரியகிரந்த காலக்ஷேப.நோக்கான் பிள்ளை காணுராக, செல்லுநரின் சிடரான சாத்தாதவர் அகங்கரித்து வந்து தேசிகமணியின் பாதப்போதுகளைப் பிடித்தீர்த்துவிட ஆண்டுத் தேசிகர்: కింనంతం என்ற ச்லோகத்தை நினைந்து க்ஷமித்தருளவேண்டு மெனப் பொறையிரந்து మహాంతే నాహం తే వివరణపదం என்று தந்திருவுளநோக்கி யருளிச்செய்து—கொடியரைக் காணுனானி குவலயந் துறப்ப போன்று—(உடையவரும் பட்டரும் ஆண்டிருந்த சில் புல்லோரது உபத்திரவத்தினைச் சகியாதுகோயிலை நீத்துத்தேசாந்தர மெய்தினரைக்கடுப்ப) தங்குடும்பத்தொடுமுதலிகளையுமுடன்கொண்டு மேனுடெய்தித் திருநாரணனையுஞ் செல்வப்பிள்ளையையுந் தொழுது ஸத்யமங்கலத்தில் நித்யவாஸம் புரிந்துகொண்டு, ஆண்டு காவிரிக் கரையி லெழுந்தருளியிருக்கிற வரதராஜப் பெருமாள் ஸந்நிதியில் முதலிகளுக்கு ஸ்ரீபாஷ்யாதிகளை போதித்துக்கொண்டிருந்தனர்.

ஈதொருங்காக,— கந்தாடை யிலக்குமணாசாரியர் தமது அந்தேவாஸிகளால் பரிபவ மெய்திய நிகமாந்தாரியர் தம்பால் புரிந்து சென்ற அபராத க்ஷாபணாதிகளை யுன்னாதிருந்துழி, சின்னாள் கழிந்தவாறே தனது யாக்கையில் சோகை (ஓர்விதநோய்) கண்டு அதோடு புத்ரோத்பத்தியு மில்லா திருந்தனர். கண்ட பன்னியார் நாயகனை நோக்கி 'தங்க டிருமேனியில் இன்னமாயச் சோகை வரக் காரணமென்னைகொல்? ஏதேனும்பரம பாகவதாபசாரம் புக்கதோ' என்னலும், பதியார் 'யானொன்று முணரகில்லேனே' எனக்கிளத்தி ஐயமெய்தி தஞ் சிடர்களை வினவ, அன்னார்: "ஒருநாள் வேளையில் நாமெல்லோரும் வீதிவழிச்செல்லுழி தங்களைக் காணுமலும் மரியாதை புரியாமலும் காலக்ஷேபத்தே கண்களையும் மனத்தையும் செலுத்தி யிருந்த நிகமாந்தாரியரை (கால்களை யீர்த்துப்) பரிபவம் பண்ணினோ" மென்றனர். கேட்ட தம்பதியர் உள்ளங்கசிந்து பெருமூச்செறிந்து "ஹா! கொடிது, கொடிது! என்வினை யியற்றினீர்? இயம்பற் பாலதோ!

நன்றல புரிந்தார் மாட்டு நாயகன் சினந்து பல்ல
நன்றல பிணிக ளேற்றி யருநர கழுந்திச் சாம்பி
பொன்றிடப் புரிந்து பின்னும் புவியினி லேற்றி நீற்கும்
வென்றிடா வினைகளெய்த வைப்பனல் விரும்ப லென்னே!

பரம பாகவதர் மாட்டு அரும் பழிசொற்று அவரை வருத்தியதனாலன்றோ ஆங்கவர்மேனுடையலாயது" என்ன வியம்பி பேரனுதாபத்தையுடையாராய் பிள்ளை புக்குள்ள சத்யமங்கலத்திற் புக்குத் தேசிகமணியை யண்மித் தீர்க்காஞ்சலி புரிந்து பரவசராய் ரக்ஷித ஸக்ஷிதஃ என்று சரணடைந்து நிற்க, வாக்கி 'ஈதென்ன வென்னலும், இலக்குமணாரியர் தனது விருத்தாந்தங்களை யாதியோடந்தமா வறைந்து பொறையிரந்து அன்று தொட்டோராண்டவணேயேயிருந்து நாடோறும் நிகமாந்தாரியரது ஸ்ரீபாதோதகத்தையேற்று அருந்திவரலாயினர். அவ்வணமிருந்துழி, புனவின்மாட்சியால் இலக்ஷ்மணாசாரியர்க்குச் சோகை யென்னும் பெருநோய் நீங்க, இல்லக்கிழத்தியுந் தொல்வினைநீங்கி மெல்லிழையார் பலருமெச்சச்சூலெய்தி மெல்ல மெல்ல உரிய இலக்கணங்களமையச் செவ்வியளாய் விளங்கினள். பின்னர்ப் பெருமகிழ்ச்சியால் தம்பதியர்தம்மொடு பிள்ளையையுங்கோயிற் கழைத்துச்செல்லவேண்டுமென் றுன்னிக் கருத்தைவெளியிட, பிள்ளையாங்கதற் கிணங்காது 'யாமின்னுஞ் சின்னாள் திருநாராயண புரத்திருந்து பின்னர் மீள்வோம்' என்றனர். தம்பதியர் 'அங்கனாக' வென்றரிய விடைபெற்றுத் தம்மூர்புக்கு ஆசாரிய பக்தியிலேயே மாறாக் கருத்துடையோராய் கேட்டார்க்குத் தமது விருத்தாந்தங்களை விளம்பி வாழ் நாளில் ஒரு நாள் ஓரருங் குமரனுதித்தனன். வாக்கியினது ஸ்ரீபாத சுத்தோதக வைபவத்தால் உதித்ததாகையால் குழவிக்கு **தீர்த்தப்பிள்ளை** யென்றும், தந்தையினுடைய

வும் தேசிகமணியினுடையவுமான நாமங்களை யொருங்காக்கி **ஆயியாழ்வான்பிள்ளை** யென்று மற்றோர் பெயருஞ் சூட்டி மகிழ்ந்தனர்.

முன்ன மறைந்துள வண்மே பிள்ளை திருக்கோயிலை யுன்னி [illegible] என்றபடி, துரிதமாய் சில முதலிகளோடு தேவியையுங் குமாரரையுஞ் சத்யமங்கலத்தேயே இருக்கும்படி கட்டளையிட்டு பேரருளாள ஜீயர் ஆதிய பலரொடு அரங்கநகரை யடைந்து ஸ்ரீரங்கநாச்சியாரையும் அழகிய மணவாளனையும் வணங்கி முன்போல் வித்தாந்த பரிபக்வராயிருக்கையில், பண்டையே போன்று வடதேய வித்வானொருவன் வந்து 'வேதாந்தத்தில் வாதிடவம்மின்' எனப், பிள்ளையைச்சார்ந்தார் 'அங்ஙனே ஆகுக' என்று பேரருளாள ஜீயரை யேற்றவணம் புரிய நியமித்தனர். எதற்கும் மனமுளையா ஜீய ரங்ஙனேயெழுந்து வாதிடத் துவக்கி வேதாந்தகோளரி செய்துள சததூஷணியானும், பல பிரமாணங்களானும், வரம்பில் யுக்திகளானும் வேதாந்தத்தில் மூன்றிரவு வாதியற்றி யெதிரியை வென்று எள்ளி நம் வாதியின் பாதபத்மங்களிற் பணிவிக்க, கோதில் ஞானசிகாமணியாந் தூப்பிற்பிள்ளை நிகழ்ந்த அவ்வாதக்ரமத்தைக்கேட்டு உள்ளங்கனிந்து பேரவாவோடு ஜீயரை விளித்து நீவிர் **பிரம்மதந்திரஸ்வதந்திரர்** எனக் கிளத்திக் குளிர நோக்கியருள, சுதர்சனபட்டராதியோரு மஃதொக்குமென்று உவந்தனர்.

தேசிகரன்னணம் ஞானமாணவரோடிருப்பதை யிறையு மாற்றகில்லாராய்ச் சில்லோர் வெறுத்து ஸத்ஸம்ப்ரதாயர்களிடத்தும் ஸத்ஸம்பந்திகளிடத்தும் கலி வைபவத்தால் அசூயையுடையாராய் பாகவதாபசாரத்தையே கர்த்தவ்ய கிருத்யமாக்கருதி நிற்க, அதற்கெம்பெருமான் றிருவுளங்கலங்கி [illegible] என்றவணமே, இம்மையிலேயே யவர்களை சிக்ஷிப்பான் கருதினர். அஃது [illegible] என்ற நியாயத்தாலே பலர்க்கும் நேரிடத்தக்கதாயது. எங்ஙனே யென்னில்,—பிரத்தியந்த வாதிகளான துருஷ்கயவனுதியர் திருச்சிராப்பள்ளியை யடைந்து பிரஜைகளை ஹிம்ஸித்துக்கொடு ஜயத்வஜமிட்டிருந்தனர். ஆங்கவர்காணு வத்தலவரும்பதி பெரிய பெருமானுக்கும் அழகிய மணவாளனுக்கும் பாஷாணகுலித்தாலே திரையிட்டு அதன் முன்னர் ஓர் புதியவிக்ரஹத்தை நிறுத்தி பெரிய பெருமானையும் நாச்சியாரையு மொரு பொற்றட்டகத்திருத்திக்கொடு தொலையிலுளகண்ணுழையாக் கானகமேயினர்.

துருக்கர்தந்தானை வெகு வைணர்களை வருத்திக்கொண் டிருந்துழி, பெருமானைப்பின்பற்றிச் செல்கிற தேசிகர்பிரானை சுதர்சனபட்டராவார் கரத்தைப் பற்றிக்கொண்டு (ஓர் புத்தகத்தை நீட்டி) 'இச் **சுருதப்பிரகாசி**கையை சோதித்துப் பிரவர்த்திப்பியும்; இன்னது நும்மால் தழைப்புறுதல் நம் அம்மாள் கருத்தாகையால் இவ்வமையத்தி னும்மைக்கண்டேன். இதைக்

கைப்பற்ற றகும். பெருமானைத்தொடர்ந்து ஸம்ரக்ஷிப்பதைக்காட்டிலும் இன்னதைச் சோதித்துப் பிரவர்த்திப்பதே மேதக்க' தெனவீந்து குமரரிருவரையுங் கரம்பற்றச் செய்து 'இப்பாலர்களையும் புரத்தல்நுமதுகடனே' என்றனர். 'அங்ஙனே ஆகுக' வென்ன நூலையும் சுதர்களையுங் கரங்கொண்டவாக்கி சுருதப்பிரகாசிகையின் பட்டோலையை யாண்டோர்பான் மணலிற் புதைத்துக் கரந்திருந்து அருக்கன் குடதிசையை யெய்தியவாறே பட்டோலையை யெடுத்துக்கொண்டு இளஞ்சிருர்களுடனே ஸத்யமங்கல மேகுவானுன்னி—பிரம்மதந்திரர் முதலான ஏனைய பெரியோரை நீத்தோமே! என்புரிவல்? என்னப் புறங்காணுராய், ஓரிருண்ட அடவி நெறிவாய்ச் சென்றனர். நிற்க, (தெய்வாதீனமாய்த் தாம் விரும்பிய) பிரம்மதந்திர ஜீயரும் மற்றும்முதலிகளும் பெருமானுக் கநுகதாளாய் காடேறப்புக்கு ஆங்குவாக்கியைக் காணுமையினல் மிக மனமுளைந்து மீளவுங் கோயிலை யெய்தி நேடிக்காண்பானுன்னி நெறிதவறி வருகையில் எதிர்செலுந் தேசிகரைக்கண்டு,—மிக மனம் புழுங்கிக் கண்ணீர் வார நாத்தழும்பேற,

துறக்கநெறித் தூவிளக்கே துகளிலருங் கோமளமே சுடர்கால் பாச
வறக்கடவு ளகஞ்சிலிர்க்கு மறநெறியே வருங்கமல நாப னும்மைச்
சிறக்கவரும் புவிமடந்தை சிரந்துளக்கி வரவிடுத்த செயலோராது
மறப்பருங்கா டிதினுழைந்து வாழ்வதற்கோ வகைவினைந்தீர்வாக்கி வாக்கி.

என்னவா வருந்தி யீற்றில் யாவருமொருங்காயினமையால் மகிழ்சிறந்து நெறிகடந்து சத்யமங்கலம் புக்குறைந்தனர். ஆண்டுத் தேசிகர் சுருதப்பிரகாசிகையைப் பரிசோதித்து பிரவர்த்திப்பித்துக்கொண்டு உடனடைந்த விருசிருர்க்கும் உபநயனச் சடங்கியற்றிச்சாத்திரங்களையும்விசேடார்த்தங்களையும் போதித்து வந்தனர்.

ஈண்டிங்ஙனமாக,—கோயிலினின்றும் எழுந்த அழகியமணவாளன் அழகர் திருமலையிற் சின்னுட்டங்கியிருந்துமேனுட்டுநெறியாய்த்திருமலைக்கெழுந்தருளித்திருவேங்கடமுடையான் ஸந்நிதியில் தினவத்புதோத்ஸவராக்கிடந்தனர். (இன்னும் வரும்)

V. K. அரங்காசாரியர்.

CHINNATHAMBI.

சின்னத்தம்பி-IV.

அதிகாரம் 6. பிள்ளை விருத்தாந்தம்.

இவ்வாறு சிலநாளாயின. காளைமாபுரிக் கவுண்டன் ஒருநாட்காலைமாரியம்மன் சந்நிதிக்கு வழக்கப்படிபோய், ஊரார் குறைமுறைப்பாடுகளை விசாரித்துத் தீர்மானித்து இல்லம் போயினன். அங்குதம்பியார் போஜன மருந்தி

ஃ ஓ]

வடுங் கையுமாய் இரத்தினக் கம்பளத்துமீது உட்கார்ந்திருப்பதைக் கண்டு அளவளாவிப் பேசிக்கொண்டு, ஸ்நானஞ்செய்து அனுட்டான முடித்து "அறுசுவையுண்டி யமர்ந்தில்லாள் ஊட்ட ஒரு சிகை நீக்குண்டு" கையல ம்பி எப்பமிட்டு விபூதி நெற்றிக்கணிந்து "சிவசிவா" என்றுசொல்லிமுற்றம் அணுகி விரிப்புமேல் தானும் வீற்று வார்த்தையாடிக் கொண்டிருந்தான். இருக்கும்போது கவுண்டன்,

"தம்பி! நான் அன்று கேட்டசங்கதியை இப்பொழுது சொல்லவேண் டும். சொல்லி என்மனசுப் புண் ஆற்றுதல்உன்கடமை" என்முன். தம்பிசிறிது யோசித்தார். ஆயினும் இதுவரை கவுண்டருக்குத் தெரியாத மறைபொருள் யாதொன்றும் தம்பியார் மனதில் இல்லை. ஆதலால் இதைமட்டும் மறைத்து வைப்பாரோ? வைப்பதிற் பயனென்ன? மெய்கூறுவாரோ; பொய்கூறினுல், கூறியதை மறைக்க ஒருபொய்யும் அது வெளியாகா திருக்க வேமுெரு பொய்யும், இதைப் பாதுகாக்க வேறேவிதப் பொய்யும் புகன்று கடைசியில் எல்லாம் வெளியானுல் முழுப் பொய்யாகு மென்றறியாரோ! துய்ய தாய்தந்தையர்க்குப் பொய் யுரைத்தால் வறுமைப்பிணிதொலையா வெ ன்பதைத் தட்டற வோர்ந்தவர் தம்பியார் அன்றே! பெற்றெடுத்து வளர்த் தும் தாய் தகப்பன் தமக்குக் கவுண்டன் என்பதை அகமீது செதுக்கி வைத் திருக்கின்முர். இவைகளை நன்குணர்ந்த தம்பியார் உண்மை கூறுவதே கட மையெனக் கடைப்பிடித்து வாய்திறந்தவர் கண்ணில் தாரைதாரையாய் நீர்வடிந்தது. கவுண்டரும் தம்பிமீது வைத்த பரிவால் கண்ணீர் விட்டனர் அடுத்து நின்ற கவுண்டன் பத்தினி கண்டு, "இதென்னன்னே! சிறுமைக் கேடு. அவர்தான் பச்சப்பசுங்கிள்ளை அழுகிமுர். நீங்களென்னஇடிச்சபுளிபோல் இருந்து கண்ணீர் விடுரெங்கோ. நல்ல கொடுமை. அழகு. சும்மா கிடங்கோ அவன்னே—ய்; இவன்னே—க்கா." என்று உரத்துக்கூவினள். இவ்வரவ ம் இருவர் வயிற்றிலும் இடியாய் விழுந்தது. கவுண்டர் உடனே தேறி இனிக் கண்ணீர் விட்டால் காரியங் கெட்டுப்போகுமென்று முகம் துடைத்தார். தாம் பூலந்தரித்தார். தம்பியாரும் கவுண்டச்சிப் போட்டகூச்சலால் ஊர்கூட்டிச் செக்குத்தள்ள நேருமென நினைத்து, "எண்ணுதவெண்ணிமெல்லாமெண்ண யெண்ணியேழைநெஞ்சம், புண்ணுகச் செய்ததினிப் போதும் பராபரமே" எனப்பாடினர். கவுண்டர் நீட்டிய வெற்றிலைச்சுருளையும்பாக்கையும் வாங்கிவா யில் போட்டு முன்வரும் நீரை உமிய வெளியே வந்து ஒருவரும் தெய்வசங் கல்பத்தால் வாராமையை யறிந்து உள்ளே போய் உட்கார்ந்துசிரித்த முகத் தோடு உரையாடுவாராயினர். தாம்கூறிவரும்குடும்பமாபாரத்தைஆதியோடந் தம்வரை அமைவுறக் கேட்டுவரவேண்டியதற்கு அதிகசந்தோஷமாய் உடன் பட்ட கவுண்டன் முகத்தைப் பார்த்து,

"ஐயா! நான் பூவுலகிற் பெரும்பாவி. அதிக கொடுமையாளன். பிறந்ததற்கடுத்த வாண்டே என் தாய்க்கு மேலுலகைக் காணியாக்கினேன்.

தந்தையை ஐந்தாமாண்டில் நான் பள்ளிபுக்க முன்னரே இழந்தேன். உல கோர்க்குத் 'தாய் மரிக்கில் சுவைபோம்,' 'தந்தைமரிக்கில்கல்விபோம்.' முன் னறி தெய்வங்களான தாய்தந்தையர்கள் இளமைப் பிராயத்தில் என்னைத் துறந்து, வானுட்டை வானுடாக்கிக்கொண்டாலும், தந்தையுடன் பிறந் தாள் என்னைச் சிந்தை களிகூரவெடுத்து நாள் ஒரு வண்ணமும் பொழு தொரு மேனியுமாய் வளர்த்துத் தாலாட்டிச்சீராட்டிப்பாராட்டி வந்தனள். தந்தை தேடிவைத்த நிதிக்குவியலனைத்தும் ஞாதிகள் அபகரித்தார்கள். பண்டம் பாத்திரம், தோப்புதீதுறவு, நகை நப்பு, காசுகப்பு ஆதியவைபோன வழிதெரியாது. ஞாதிகள் மெல்ல மெல்லத் தெரியாவகையில் அபகரிப்பதை அறிந்த என் அத்தை அடுத்துவளர்க்கப்புகுந்தாள். பயன்படுவதாய்க் கா ணுள். வீணுகத் தலையிடுவதை ஒழித்தாள். என் செய்வாள் பேதை ! கடவு ளுக்கே அற்புதமென விட்டு வாளாவிருந்தனள். சாத்திரப்படி அந்தந்தப்பரு வங்களில் என்னென்ன செய்யவேண்டுமோ அவற்றை யெல்லாம் பழுதடை யாது செய்துமுடித்தனள். அவளோகைம்பெண். புருஷனைப் பதினைந்து வரு ஷத்திற்கு முந்தியே சிவனுடைக்கியமாக விட்டுத் தனியே புலம்புறும் நங் கை. நாங்கள் கார்காத்த வேளாளர் திருமரபுதித்தவர்கள். நாங்கள் பூசுவதும் வெண்ணீறு—சிந்திப்பதும் சிவநாமம்—பூண்பதுவும் அக்குமாலை—பேசுவ தும் அரன்சீர்—ஓதுவதும் திருவாசகம்—பாடுவதும் தேவாரம். எங்கள் குடு ம்பமோ பெரியகுடும்பம். என் தந்தையார் நற்குணசாலி. சீலர்; தரும குணம் படைத்த தயாநிதி. அடுத்தோரைக் கெடுக்காது ஆதரிக்கும் நன்மனத்தர். தனது தந்தையார் வருக்கத்தாரையும், தாய் கூட்டத்தாரையும், மனைவி வீட்டாரையும் போஷித்து வந்தார். என்வே, மூன்று தொட்டி வீடு நிறைய ஜனங்களும் பிள்ளையும் கொஞ்சிக் கொஞ்சிக் கூத்தாடுவார்கள். இதைக்கண்டு அவர் அகமகிழ்வர். என் தகப்பனுரால் எண்ணிலாத நன்மை அடைந்தவர் கள் அனேகர் உளர். எத்தனைக்குத் தரும சிந்தனையும், தயாள குணமும் படைத்து வந்தாரே அத்தனைக்கும் ஊரார்கள் மதித்துப் புகழ்ந்து போற் றினுர்கள். திருத்தவத்துறைக்கே இவர் பெருமை பொருந்தியவராக வாழ்ந் தார். எங்களது வீட்டிலிருந்து ஒரு சிறுபையன் வெளியேறினுலும் அவன் வந்திப்போர்களுக்குக் கைதூக்கித் தூக்கிச் சலிப்படைவான். இவ்வளவு பெருமையுடன் வாழ்ந்தவருக்கு "உண்டென உரையிற் கேட்பா ருயிருறு பாவ மெலாங்—கண்டினித் தெளிக" வென்றுகாட்டுவான்போல மானுடவடி வெடுத்து நான் பிறந்தேன். பிறந்தபோழ்தே பெற்றோர்களுக்கு மண்ணுலக வாழ்க்கையைப் பிரித்தவன். அத்தையம்மாளுக்கும் ஒழியாத்துக்கத்தை ஊட் டினேன். எனக்கு மூத்தோர்கள் இல்லை. இளையோர்களும் அப்படியே. தங் கத்தகட்டில் பறக்கும் ஈப்பிறப்பதுபோலத்தனித்துதித்தேன். எனக்கு ஞாதி களோ அநேகர் கணக்கிலடங்கார்கள். அத்தைக்கோ புத்திரசந்தானம் கிடை யாது. அவள் வருக்கத்தார்களுக்கும் பஞ்சம் இல்லை. இவ்விருதிறத்தார்களுக்

கும் நான் அத்தை வீட்டில் வளர்வதில் அச்சமுண்டாயிற்று. ஒன்று கூடிப் பொருமைமேலிட்டவர்களாகி எனக்குள்ள சொத்தையும் அத்தைக்குள்ளதையும் அபகரிக்கும்எண்ணங் கொண்டார்கள். அத்தையம்மாளிடம், எத்தனை விதமாகவோ துர்ப்போதனை சொன்னார்கள். சதுர்விதோபாயங்கள் செய்தார்கள். அனைத்தும் கமரிற் கவிழ்த்தபாலும், செவிடன் காதிலூதிய சங்கநாதமுமாகப் பயனற்றதைக் கண்டார்கள். என்னை ஒழித்துவிட உரைத்தார்கள். அத்தை உடன்படவில்லை. என்னை அடிப்பார்கள். துரத்துவார்கள். கன்னத் தறைவார்கள். கரகரவென்று பற்கடித்து உதடு துடிதுடிக்க மீசைமயிர் சிலிர்த்து நிற்க முழங்கையால் என் மோவாய்க்கட்டை மீது மோதுவார்கள். நான் என்ன செய்வேன்? திக்கற்றவனுக்குத் தெய்வமேதுணை! அகதிக்கார் துணை? ஆண்டவனே அடைக்கலம். சில போது அத்தை இவர்களது துர்க்கிருத்தியங்களை அறிவாள். அறிந்து இத்தடியர்கள் மீது (பொருமைக்காரர்மீது) சினந்து சீறிவிழுவாள். நான் பள்ளிக்கூடம் போவேன். வழியில்சுற்றத்தார்களான சில கடையர்கள் மறித்து ஏட்டைப் பிடுங்கிக் கிழித்தெறிந்து ஓடி அத்தையிடம் என்மீது புகார்புகலுவார்கள். அவள் அவற்றைக்கேளாள். ஏடுபுதுப்பித்துத் தருவாள். காசுதருவாள், பணந்தருவாள், தூசுதருவாள், துணிதருவாள், ஆடைதருவாள், அணிதருவாள், பக்ஷணபலகாரம் புதிது புதிதாய்ச் செய்து தந்து கூடவிளையாடும் பிள்ளைகளுக்கு மீவாள். ஆனால் இத்துட்டர்களின் இம்சையை மட்டும் இவளால் ஒழித்துத்தர முடியாது. அதற்காக அழுவாள். மனம் அழுங்குவாள். என்முன் கண்ணீர் ஒரு சிறிதும் விடமாட்டாள். இத்துட்டர்கள் நான் படிக்கும் பள்ளி யுபாத்தியாயருக்குப் போதித்து, என்னைக் கடையன், படிப்பேருமந்தி, சோம்பேறி, அகங்காரி, கள்வன், அறிவில்லாதவன், பிணக்கன், சினத்தன், துயில்வோன், படிறன், என்று அத்தையாரிடம் கூறவைத்ததோடு, சதாபள்ளித்திண்ணையில் நிறுத்திவைக்கக் கூறினார்கள். உபாத்தியாயரும் அவ்வாறே செய்தார். சிறுக்கிபோல என்னை உட்கார்த்தினார். தமது வீட்டுக்கு வேண்டும் சாமான்கள் அனைத்தையும் என்னை வாங்கிவரக் கூறுவார். சாணிதட்டக் கூறுவார், மாட்டுக்கட்டுத்துறைக் கூழங்களை வாரவைப்பார், சம்பளம் வீடுவீடாய்ப் போய்த்தண்டிவரச் செப்புவார். அவர் வீட்டுத்தாசியை நீக்கிவிட்டார். ஆனால் என்னைத் தருப்பை கொய்து வரக் கூறுவதில்லை. அது செய்திருந்தால் அரிச்சந்திரன் மைந்தன் விதிபோல மயானத்தில் அரவந்தீண்ட மாய்ந்து அத்தைதுயரை ஒதுக்கி இருப்பேன்" என்றதைக் கேட்ட கவுண்டன் "அவ்வாறு சுவாமி விடுவாரோ? காளைமாபுரி உன்னால் மேம்பாடடைவது எப்படி?" என்றனன். இதைக்கேட்டவர், "கவுண்டரே. இம்மூர்க்கர்கள் செயலைப்பாருங்கள்; அவ்வுபாத்தியாயரோ என்னைப்பாடங் கேட்கவே மாட்டார். பிள்ளைகளுக்குப் படிப்போதிவைக்கும்போது என் மீது கற்பனையாகப் பழிசுமத்திக் கீழேதள்ளி நிற்கவைப்பார். அடுத்த பிள்ளையைக்கொண்டு என் தாடையில் பளீரென்றறையக்

கூறுவர். சத்தத்தைக் கேட்டுச் சந்தோஷிப்பர். இவ்வாறு அவர் புரிந்த கொடுமைகள் கொஞ்சமா! முகட்டிற் தொங்கவைத்துப் புட்டத்தில் பிரம்பாலடித்துக் கீழே குதிக்காதிருக்க வைக்கலிட்டுக் கொளுத்தியும், எழுத்தாணிகுத்தியும் வைப்பார். ஐயோ! தெய்வமே! இதென்ன கொடுமை என்பேன், வீட்டிற்குப்போவேன், அத்தையிடம் அறைவேன், அவளும் உபாத்தியாயரைக் கூவித் துயர்புரியாதிருக்கக்கூறுவள். உபாத்தியாயரோ மடமை யெல்லாம் திரண்டெடுத்த ஓர் நரவுருவம். அவர் 'என்னம்மா! பொன்னம்மா! பையன் சுண்டன் ஒன்றும் அறியான், இவன் எங்கே ஐயாவயிறெங்கே, அங்கே எங்கே பிறந்தான்! சுத்தக்கசடு, முழுஅசடு. இவன் பிறந்த லக்ஷணம் தெரியாதா? பிறந்தபோதே ஐயாவையும், அம்மாளையும் ஒட்டிவிட்டசண்டாளன். இவன் என்ன படிப்பான்? பாவம்' என்பர். அத்தை அதைக்கேட்கப் பொறுது கடுமொழி கழறுவாள். இஞ்சி தின்ன குரங்குபோல உபாத்தியார் பற்கெஞ்சி ஓடுவார். இவரது சொல்லால் அத்தை ஐயங்கொண்டு "அடியாதீர்" என்பள். இவ்விதமிருக்க, ஒரு நாள் என்னை உபாத்தியாயர் காரணமின்றி எழு எட்டு நீண்ட எண்ணெய் தடவிய சன்னப்பிரம்புகள் துண்டு துண்டாய்ச் சக்கை சக்கையாய் ஒடியும்வரை தண்ணீர் குடிக்கக் கொடுத்துக் கொடுத்து அடித்தார். நான் கதறினேன், அலறினேன். அச்சமயத்தில் எனது சுற்றத்தான் ஒருவன் அத்தெருவில் போனவனைக்கண்டு அடி பொறுக்காது கூப்பிட்டேன். அதற்கு அவன் "உபாத்தியாயரே இன்னும்நன்ருய் அடியுங்கள், இது போதாது, அவனுக்கு இன்னும் வேண்டும்" என்ருன். இவனல்லவா தறுகணுளன். எமனுக்கு தறுகணுளன் என்னும் பெயர் எதற்கு? உபாத்தியாயர் கைசலித்ததோடு வேறு பிரம்பு அருகிலில்லாமையானும், அடுத்தகடையில் கிட்டாமையானும், தூரக்கடையில் இருந்த பிரம்பொன்றை வாங்கக் காசு பையில் இன்மையானும் கடும் வெய்யிலில் என்னை நிற்கவைத்து, அடுத்த பையன் வேஷ்டியை அவிழ்த்து விரித்துத்திண்ணையில் காலை நீட்டிப் படுத்துத் தலைக்குப்பிள்ளைகள் கொணர்ந்த வரட்டியில் சிலவற்றை எடுத்துஅணையாக்கித் துயில்கொண்டனர். குறட்டைவிட்டனர். ஒருமூச்சுத்தூங்கி எழுந்து தூரத்தில் நின்ற என்னைப்பார்த்து "ஓ! பிணமே,மூதேவி, வீட்டுக்குப்போய் சோற்றுக் கடன் கட்டி முண்டைச்சி தாலியை அறுத்துவா" என உரத்துக் கூவிக் கையை ஓங்கிக்கொண்டு துரத்தினர். ஓடினேன். அத்தை மடிமீது ஐயோ வென்றலறி வீழ்ந்தேன். அங்க மனைத்தையும் காட்டினேன். பிரம்படித் தழும்புகள் சர்வாங்கமும் இருத்தலை இருகண்ணுனும் பார்த்த அத்தையம்மாள் தனது கண்ணீரால் என்னைக்குளிப்பாட்டினள். மனநொந்து பலவாறு சொல்லி வருந்தினள். அன்ன மூட்டினள். படுக்கவைத்தனள். அந்திப் பொழுதில் என்னைக்கைப்பற்றி அழைத்துக்கொண்டு பள்ளிக்குப்போய் உபாத்தியாயரைக் கண்டபடி வைது சிவந்த கண்ணினளாய் உபாத்தியாயரே உன் பிள்ளைகளை யெல்லாம் நிறுத்து, இவனையும் நிறுத்து. ஐயா பைய

னும் இளைத்துப் போவானு? பாடங் கேட்போம், என்றனள். உபாத்தியாயர் அத்தை கூறியபடி செய்தார். பாடங்கேட்டார். நான் எல்லாரையும்விட முந்தியே தடதட வென்று சொன்னேன். பழம்பாடங் கேட்டார். புதுப்பாடங் கேட்டார். எதற்கும் நான் தப்பவில்லை. கேட்டதை எல்லாம் சொன்னேன் " என மொழிந்ததற்குக் கவுண்டன் "தம்பி! நீ யென்ன சாமானியமா? இங்கு வந்தஅன்றைக்கே இந்த ஓலையை படித்தவனல்லவா ? அந்த ஓலை வாசகம் எப்படி" என்றதற்குத் தம்பி " கவுண்டரே கேளும் 'மைசூர் சமஸ்தானத்திலிருந்து காளப்பட்டி ஊர்க்கவுண்டருக்கு உத்திரவென்ன வென்றால் காளப்பட்டி வசூல் பணம் சரியாக வருகிறதில்லை' வரவேண்டிய மூன்று வருஷப்பணம் இரண்டாயிரத்தையும் அடுத்த மாதம் பிரதம வெள்ளிக்கிழமை காலையில் கொண்டு வந்து நமது சமஸ்தான கஜானுவில் செலுத்தாவிட்டால் நாம் காலைப்போசனம் நாப்பிடமாட்டோம். இது அறிக்கை' என இருந்தது" என்றதற்குக் கவுண்டர் " நீ இதைச் சொல்லாதிருந்தால் குறித்த நாளில் மைசூர் கருத்தர் சிக்கதேவ மகாராஜாவை பட்டினி கிடக்க வைத்துப் பெரும்பாவம் என் தலையில் ஏறி இழுக்காதோ" என்றனன். இதற்குச் சிரித்துக் "கவுண்டரே! அத்தை உபாத்தியாயர்மீது கோபித்துக்கொண்டாள். கடையனென்று என்னைச்சொன்ன உபாத்தியாயரை நோக்கி 'இப்பொழுது யார் கடையன் மடையனே' யென்ருள். இன்னும் உபாத்யாயரை நோக்கி 'உனக்கு உபாத்தியாயப்பட்டம் எதற்கு? காத்தில் விடவும் ஆகாதே. பட்டை பட்டையாய் நாமம் போட்டுத் திரிகின்ருயே. ஊசின புளியோதரையைத்தின்னும் உனக்குப்பள்ளிக்கூடம் என்னத்துக்கு? பையனை இப்படி நீ அடித்ததற்கு இப்பொழுது ஐயா இருந்தால் உன்னைச்சும்மாவிடுவாரோ? பலிவைத்து இருப்பாரே' எனச்சீறிச் சினந்து பலவாறுபேசிக் கடையனெனவும், தடியனெனவும் திட்டினள். உபாத்தியாயர் கண்ணீர் விட்டழுதனர். ஒருவரும் தனக்குச் சார்பாகப் பேச வரக்கண்டார் இல்லை. மறைவாக நின்றவர்கள் மறைந்தேவிட்டார்கள். கடைசியில் ஐயங்கார் உண்மையை சுற்றத்தார் கூறிய உபதேசத்தை வெட்கமின்றி வெளியிட்டனர். அத்தை கேட்டு அங்கம்பதறி இனி அவரிடம் படிக்க அனுப்புவதை மறுத்து மற்ருெருவரிடம் விடுப்பதாய்க் கூறியதற்கு உபாத்தியாயர் மதிமோசம்போனதை மன்னிக்க வேண்டித் தம்மிடமே அனுப்பிக்கப் பலவாறு கெஞ்சிக் கேட்டபடி மறுபடியும் அனுப்பினள். அன்றுமுதல் உபாத்தியாயர் எனக்குத் தனிமையாகப்பாட மோதி வந்தனர். நானும் நிகண்டோதிப் பல சதகங்கள், அரிச்சந்திர புராணம், பாகவதம், பாரதம், இராமாயணம் படித்தேன். அவர் அன்றுமுதல் நன்ருகப்பாடமோதுவார். முகக் கடுப்பையும், மனக்கொதிப்பையும், அடுத்தோர்க்குச் செவிசாய்ப்பதையும் அகற்றினுர். மன நட்பைக் கொண்டார். என்னைக் காணும்போதெல்லாம் முகமலர்ச்சி கொள்ளுவார். இனிமைமொழிபாடுவார். இலக்கணம்படிக்க வேருெருவரை அடைந்து, ஆசிரி

யச் சிறப்புச்செய்தேன். அலக்கணறப் படித்தேன். யாப்பருங் கலக்காரிகையின் நலத்தைப் பருகினேன். கவிபாடு நாவினனானேன். ஓர் நாள் நான் எனது குலதெய்வத்தின் பனிமலர்ச் சேவடிக்குத் திருப்பாமாலை அணிந்தேன். அதை இலக்கணப் போதகாசிரியர் கரமேற்று மெச்சினர். நான் படிப்பில் அபிவிருத்தி அடைவதையும், எனக்கு அறிவு வளர்வதையும், அத்தையாரிட மிருந்தும் ஊராரிடமிருந்தும் பெற்றோர்கள் செய்தி சொத்துக்களை நான் விசாரிப்பதையும், ஞாதிகள் அறிந்து என் உயிர்க்கு முடிவு செய்யக் கோவிலுள் வீழ்ந்தார்கள். நடக்கும் வழிகளில் சூனியம் செய்தார்கள். நான் ஒருநாள் படுக்கையிலிருந்து அதிகாலை எழுந்தபோது கால் பக்கத்தில் மயிருடன் கட்டிய முடிப்பொன்றைக் கண்டு அங்கம் நடுங்கினேன். அத்தையாரிடம் அறிக்கையிட்டழுதேன். இக்கொடுமைக்கு என்ன செய்வது? அவள் மனம் வருந்தினள். மாற்றூர்களோ வேலைகளை நாளுக்கு நாள் அதிகம் செய்கிறார்கள். குட்டிச்சாத்தானை ஏவிவிட்டார்கள். வீட்டில் தீப்பிடிப்பதும், கல்விழுவதும், கண்களுக்குப் பற்பல தோற்றமாவதும், நெருப்புக் கட்டிகள் உருளுவதும், நரிபாம்புகள்தோன்றி மறைவதுமாகக் காண்போம். ஆனால் அத்தையம்மாள் இவைகளுக்கெல்லாம் அஞ்சவில்லை. தன்னுயிர் மாய்ந்தால் என்னுயிர் மாயவிடுவதாய்க் கூறுவள். என்னை அவள் கண்ணினும் சிறந்த வனாகப் பாவித்துச் சிந்தைமீது இருத்தி அன்புபாராட்டி வருவாள். இதை யறிந்த மாபாதகர்கள் நஞ்சிடுவது காரியமெனக் கங்கணம் பூண்டார்கள். அவர்கள் வீட்டிலிருந்த எனது நெருங்கிய சுற்றத்தாள் ஒருத்தி அத்தையை அணுகி நடக்கப்போவதைத் தருமமாகக் கூறி ஜாக்கிரதையாய் இருக்க எச்சரிக்கை செய்து மனம் வருந்திக் கண்ணீர் விட்டுப் போயினள். அத்தையம்மாள் அங்கம்பதறினள். உச்சி மயிர் சிலிர்த்தாள். நெஞ்சு துடிதுடித்தாள். அழுத கண்ணீரும் சிந்திய மூக்குமாய்ச் சிலகாலம் என்னை அதிக பத்திரமாகக் காத்துவந்தாள். ஒரு நாள் அவள் என்மீது அதிக பரிவு பூண்டவளாய்க், கட்டியணைத்து உச்சி மோந்து முத்தமிட்டு "தம்பீ! உன் வமிசத்தில் இதுவரை ஒவ்வொரு தலைமுறையிலும் தவறாமல் சத்தரிஷியார்தம் அருளால் ஒவ்வொருவர் அரசர் அவையேறிச் சகல சிறப்பும் பெற்றுவந்தார்கள். உன்தகப்பனும் தொண்டைமான் அரசர்சமுகம் அடைந்து மரியாதைபெற்றார். நீயோ இவ்வாறு கொடுமைக்காளாகி நித்தியகண்டம் பூர்ணாயுளோடு வாழ்கின்றாய். உனது ஞாதிகள் பாவச்செயலிலாழ்ந்து பாதகம் புரிந்து நரகிற்காளாகின்றார்கள். நஞ்சருத்துவதாய் நடுங்க மனம்கொண்டு வெளிப்பட்டார்கள் என அறிகிறேன். பில்லிசூனியம் செய்தவர்கள் உனது முடிவிற்கு எவ்விதத்தில் நஞ்சூட்டுவார்களோ அறியேன். உன்னுடைய குடும்பத்தார்களுக்குப் பில்லி சூனியம், பைசாசம்அணுவளவும்கெடுதிபுரியாது. இது உறுதி. நஞ்சிடுவதாய் அறிகிறேன். அதினின்றும் உன்னை எந்த வழியில் காப்பாற்றுவேன். எத்த

னையோ ஆயிரவழிகளில் நஞ்சிடலாம். எவ்விதம் செய்வார்களோதெரியேன். எந்தவேளையில் இடுவார்களோ அறியேன். எத்துணையோவித நஞ்சுகளும் உண்டு. இனிமேல் உன் ஆருயிரைக்காப்பது எனக்குக் கஷ்டமாய் இருக்கிறது. மகாதிடர்களான சோதிடர்களைக் கூவிச்சாதகம் சோதித்தேன். அவர்களோ உனக்கு நீண்டஆயுளும், புத்திரசம்பத்தும் இராஜமரியாதையும் உண்டென்று கூறுகிறார்கள். இதை நம்புகிறதா? நம்பாமலிருப்பதா? உனக்குண்டாகும் தொந்திரவுகளோ பன்னுந்தரமல்ல. என்ன செய்கிறது! ஒன்றும் தெரியவில்லை. நஞ்சைச்சோற்றிலிடலாம். காற்றிலிடலாம். நீரிலிடலாம். மோரிலிடலாம். வேறுசிலர் பாக்கிலிடுவார்கள், சுண்ணும்பிலிடுவார்கள், கைதேர்ந்தவர்கள் சிற்றுண்டிகளில் கலந்து தின்னக்கொடுப்பார்கள். இதை எவ்விதம் அறிவது? ஆகையால் ஆவியினும் சிறந்துவிளங்கும் பாலகனே! பாவியேன் எவ்வாறு உன்னைக்காப்பேன்? தீர்க்காயுள் உனக்கு உண்டென்று சோதிடர்கள் சரதமாய்ச் சாற்றுவதால், நான் ஒன்று சொல்லுகிறேன். நீகேள். மனம் பதையாதே. நீ புறப்பட்டுத் தூரதேசம்பேர். உனக்கு அறிவுண்டு. கல்விநலம் படைத்திருக்கிறாய். அதுவே உனக்குப்பெரிய ஆஸ்தி, அதுவே உறுதியான கண், அதுவே மெய்ப்பொருள் விளக்கும், அதுவே நெஞ்சின் மெலிவிற்கோர் துணையுமாகும், அதுவே பொன்னும், அகமுமாம். ஆதலால் இதைப்பெற்ற நீ எதற்கும் மலையாதே. திடசித்தத்துடன் வாழ். கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பு. அச்சிறப்பு நீயடைந்து வாழும்போது எனக்கு ஓலை போக்கு. நான் உடனேவந்து உன்னைக் கூடுவேன். நீநாலுபணம் சம்பாதித்து ஊன்உடலைப் போற்றமாட்டாயா? நீ சஞ்சலப்படாதே. தைரியமாய்ப்போ. கடவுளேதுணை' என்று அலறிக்கூறினள். இவள் இச்சமயத்தில் பட்டகஷ்டத்தைக் கவுண்டரே! என்னால் சொல்லமுடியாது. இவ்வுத்தமி மனதைப் புண்படுத்துவது தகாதென உட்கொண்டு அத்தாய்! சரி. புறப்படுகிறேன், இப்பொழுதே போகிறேன் என்று மொழிந்து கீழேவிழுந்து நமஸ்கரித்தேன். எழுந்து நின்றேன். உடனே வீட்டினுட்புகுந்து அத்தையம்மாள் காதிற்கு அணியும் அனந்தமுடிக்கு, நாகபடம், ஆகிய ஐந்து கோடி நகைகளைக் கொண்டுவந்து ஒரு கயிற்றிற்கோர்த்து இடுப்பில்கட்டிக் கைநிறைய வீரராயப்பணம் அள்ளி மேல் வேட்டியின் ஓர் முந்தியில் முடிந்து, விபூதி நெற்றிக்குப்பூசி சத்த்ரிஷிலிங்கேசரே! உமது அருள் மெய்யென்றால் தூரதேசம் போகும் இப்பாலன் மேம்பாடுற்று வாழட்டும். அதற்கு நீர்கடைக்கண் அருள்வீராக." என்று கூறிப்போக்கினள். நானோ பற்பல விடங்களில் தாமதித்துக் கடைசியாக இவ்வூர்வந்தேன். நாங்கள் சூலமுடையார் கோத்திரத்தார். எங்களைச் சேர்ந்தவர்களது கோத்திரம் இன்னும் நான்குண்டு. அவை திருவுடையார், பருவுடையார், தனவாருடையார், கோத்தலுடையார் என்பன. நாங்கள் கொள்வினை கொடுப்பினை செய்யும் கோத்திரத்தார்களும் ஐவர். அவர்கள் தென்னவாயர், பிரமராயர், சேதுராயர்,

காலிங்கராயர், கவுணியராயர், என்னும் பெயருடையர்கள். இவையன்றி இன்னும் சில கோத்திரங்களும், குடிநூற்றிருபதும் உண்டு. எனக்கு ராயகோத்திரப்பெண்நாடித்திருமணம் முடிக்கவியலும். உரிமைப்பெண்ணுக்குப் பரியமிட்டபிறகு கடலை வெல்லங்கட்டிய முடிவில் எங்குலதெய்வம் வாழ்த்தக் கொன்றைமங்கலம் போகவேண்டும். இதற்குமுந்தி என் அத்தையம்மாள் வரவேண்டும். என்று கூறிமுடித்தனர். க்வுண்டர்கேட்டார். வியந்தார். குடும்ப உயர்ச்சியை மெச்சினர். உடனே கலியாணத்திற்கு வேண்டிய எற்பாடுபுரிய மூன்வந்தார். தம்பியை நோக்கி "ஐயா! நீகாலையில் போசனமுடித்துப் பிரயாணம் போய் அத்தையம்மாளை அழைத்துவா. நான் மற்றச்செய்திகளைக் கவனிக்கிறேன். அம்மாளிடம் பெண்விஷயமாகப் பேசுகிறேன். என் கண்குளிர உன் திருமணம் காணவேண்டும். உனது புத்திரரைத் தூக்கிச்சுமந்து மனக்களிப்படைய விரும்புகிறேன்," என்றதற்குத் தம்பி மோனஞ்சாதித்துத் தலையசைத்து உடன்பட்டார்.

K.C. துரைசாமி.

AN ELEGY ON V. G. S.

ம-ள-ள-ஸ்ரீ. வி. கோ. சூரியநாராயண

சாஸ்திரியாரவர்கள்

விஷயமாக

ஸ்ரீ-உ., கா-ஸ்ரீ-கோபாலாசாரியரவர்கள் சொல்லிய

இரங்கற்பாமாலை.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

1. கலைமகளு மலர்மகளுங் கலந்துறையுஞ் சென்னைநகர் கவின்பெற்றோங்க
நிலைமருவு மில்லரெனும் புலவர்பிரான் போற்றவளர் நிறைந்த கல்வித்
தலைவரெனுந் தருக்களுயர் கல்லூரிப் பொழிலினிடைத் தமிழின் வாசக்
கலைஞரெனு மைந்தருவிற் கற்பகமே சூரியமாற் கலைஞ னேயோ!

தரவு கொச்சகக் கலிப்பா.

2. ஆரிய நாடென்னு மணங்குக் கழகுசெயும்
சீரியரா நாவலவர் சேருமணி மாலைதனில்
சூரியநா ராயணப்பேர்த் தோன்றலெனச் சொல்லுமொரு
நீரியலு மாமணிதா னீங்கியதே நீங்கியதே!

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

3. பாரினிற் புறத்தே யுள்ள பாயிரு ளகற்றும் வெம்மைச்
சூரிய னகத்தின் கண்ணே சூழிருண் மாய்க்குந் தண்மைச்
சூரிய னீயீண் டுற்ற தோற்றமே கண்டு வானிற்
காரினிற் கரந்து செல்லுங் கதிரவ னினக்கொப் பாமே!

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

4. இளமையி லாங்கி லத்தொடு நந்த மினியசெந் தமிழினை யாய்ந்து
வளமையேய் புலமை யிரண்டினும் வாய்ந்து மன்மூத விருபுலப் புலவர்
உளமகிழ்ந் திடவவ் விருமொழிப் பயனு மூட்டினை கலைபயில் சிறார்க்குன்
னளவெவர் புரிந்தாரன்பசு ரியநா ராயண வரும்பெறன் மணியே!

ஷை வேறு.

5. தமிழ்வா ணராய நலபா வலர்க்கோர் தனிநாள் விருந்து சமையா
அமிழ்து றவேயோர் சிறுநூ றெருகுத்த வறிவாள னென்றுண் மகிழா
அமர்வா னின்மேவு புலவோரழைப்ப வமுதாம் விருந்து நுகர்வான்
அமரேச னூர்பு குவைசூ ரியாகி னறிவான செய்கை யழகே!

கலிநிலைத்துறை.

6. அரிய நற்பிர கேளிகை யணிநல னதனைப்
பரிதி மாற்கலை ஞன்னெனும் பெயரினுற் பயிற்றிப்
பெரிய மண்மிசை யுலவினை சிலபகல் பிரியா
விரிகொள் விண்மிசை யெப்பெயர் புனைந்தனை விளம்பே?

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

7. கூற்றந் தனக்குக் கற்கண்டோ கொடுமைக் கலிக்குச் சிற்றுணவோ
ஆற்றன் மிகுந்த காலமெனு மரவந்தனக்கு நல்லமுதோ
மாற்றற்கரிய வன்பிணிக்கு வாய்த்த சுவைத்தீங் கனியேயோ
சாற்றுந் தகைசா னின்னுடலந் தமிழ்ச்சூ ரியநா ராயணனே.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

8. உன்னருமைக் காதலிதா னுனையே நாடி
யுளங்கரைந்தென் னுருயிரே யென்ன வோர்பால்
உன்னருமை மக்களுனை யுன்னி யுன்னி
யுள்ளமுலர்ந் தப்பாவோ வென்ன வோர்பால்

உன்னருமை நண்பர்பிதா வொண்டமிழ்ச்சொற்
குறுதுணையே மைந்தாவோ வென்ன வோர்பால்
இன்னவருக் கேனென்ஞ தொளித்து விற்ற
வினிதுகொல்சூ ரியநார! யணவன்பாவோ.

கலிவிருத்தம்.

9. பன்னு தென்சொ லுனைப்பயிற் றித்திவி
தன்னை யெய்ந்த சபாபதி பாற்றமிழ்
இன்னு மாய வெழுந்தைகொல் சூரிய
னென்னு நாம விளம்பரு வத்தரோ?

கட்டளைக்கலிப்பா.

10. யாவ ரும்புகழ் செந்தமிழ் நூல்பல யாத்த வற்றையிந் நானிலத் தேயுள
நாவலங்கொள்புலவரவைக்கணே நாட்டிநல்லொளி மேனிலத்தேயுநீஇ
ஏவ மில்புல வோரவையேற்றிட வேகினுய்கொ லினிக்கு மொழித்திறப்
பாவ லாதமிழ்ச் சூரிய நாரண பாலருக்குற வாகிய பண்பனே.

வஞ்சிவிருத்தம்.

11. மன்னுநல முள்ள திவ் வையகமென்
றுன்னுவுயர் வானக முற்றனையோ
இன்னுமை யெமைச்செய லேலுமதோ
நன்னுவல சூரிய நாரணனே.

நேரிசையாசிரியப்பா.

12. அகத்தியன் பெற்ற மகத்துவத் தமிழி
னுரணங் கினையச் சிருறு தமிழ்நாட்
டரசியல் வேந்தர் வரிசையிற் போற்றலின்
இனிமையின் வளர்ந்தவக் கனிமொழிவனிதையை
அந்நாளிருந்த நன்னுவலர்பலர்
ஒல்காப்பெரும் புகழ்த் தொல்காப்பியத்தொடு
நந்தாவளனுறு சிந்தாமணியும்
உலப்பருசெய்கைச் சிலப்பதிகாரமும்
பணிமேலதாகு மணிமேகலையும்
இளையாவழகுறு வளையாபதியும்
மண்டலமொளிசெயுங் குண்டல கேசியும்
கருக்கொளும் பெரும்பொருட் டிருக்குறளதனே
டின்பெலாம் பயக்குங் கம்பராமாயணம்

நல்லிசைவாய்ந்த வில்லிபாரதமுதற்
பலதமிழ் நூல்களிற் கலனலந்திகழ்தரப்
பூட்டி மகிழ்ந்துசீ ராட்டி யகன்றனர்
என்ப தறிந்துநீ யன்புட னின்பதி
தோன்றி வளர்ந்தவத் தேன்றமிழ்மா தினை
மன்னவர் முதலா முன்னவர் பலரும்
போற்றிய தோர்வர லாற்றை யுணர்ந்தவ
ளோடுசீர் சாலுங் கூடலி னிடத்துநீ
தோன்றுரி மையினவ் வான்றதமிழ்ப்பெண்ணின்
அருமையும் பெருமையும் வரன்முறையாய்த்தே
புதுக்கலன் சிலசெய மதித்துளத் தாங்கே
இனிப்பா வியற்றிய தனிப்பா சுரத்தொகை
உலாவி வரும்புகழ்க் கலாவதி யோடு
சீர்பா வியதாம் ரூபாவதிமுனம்
ஆன கதையுறு மான விசயம்
நாவளந் தழைத்த பாவலர் விருந்து
துதிவாய் செந்தமிழ் மதிவாணன்கதை
அமிழ்தென வினிக்குந் தமிழ்மொழிவரலாறு
நாடகம் வியக்கு நாடகவியலோ
டின்னன சிலநூல் பன்னியியற்றிய
பணிகளி னுலவ ளணிபெறப் பூட்டிச்
சீராட்டி யன்பு பாராட்டி னுய்நீ
சிலபக லின்னு முலகிடை நிலவிடின்
எத்துணைப் பணிசெய்து வைத்திடு வாயோ?
முத்தமிழும் வளனுற்றிடலாமே.
தென்னுடு செய்த இன்னுமை யென்னே!
இந்நா டொரீஇயப் பொன்னு டடைந்தனை.
ஏரார் சூரிய நாரா யணனே!
பூத வுடம்புதா தேன முறலறிந்
தன்னதை யொழித்து மன்னுறூஉம்
புகழுடம் பதனிற் றிகழுதி யீண்டே.

AHALYA.

அஹல்யா.

(109 - ம் பக்கத்தொடர்ச்சி.)

அவ்விடத்தில் ஆறு அதிக விசாலமாகவும் ஆழமாகவும் இருந்தது. ஆழமாக இருப்பதைக்கண்டு அவ்வீரன் அக்கரைக்கே திரும்பிவிடமாட்டானு என்று இவ்வள்ளுவன் ஒவ்வொரு நிமிஷமும் எதிர் பார்த்தான். ஆனால் அவ்வீரனே அப்படிச் செய்யவே இல்லை. குதிரைமேலேறினபடியே ஆற்றைக்கடந்து வருவதிலேயே நோக்கமாக வந்துகொண்டிருந்தான். ஆழமதிகமாகிக் குதிரை கால் நிலைகொள்ளாமல் தத்தளிக்கவே அவன் அக்குதிரையின் கடிவாளத்தை வீசிவிட்டுக் கையால் நீந்திக் கரையடையமுயன்ருன். சுமை குறைந்தவுடனே குதிரைமட்டும் அக்கரை போய்ச்சேர்ந்தது. அவ்வீரனே அவ்வாற்று வெள்ளத்தைக் கடந்து கரைசேரமுடியாமல் கைசோர்ந்து தண்ணீரையும் வயிறு நிறையக் குடித்துத் தவித்து ஆற்ருேடேயே போய்விடுவான்போல் இருந்தது. இந்நிலையில் இவன் படும் அவஸ்தையைக் கண்டதும் வள்ளுவன் சும்மா இருக்கவில்லை. தன கஷ்டத்தையெல்லாம் மறந்து ஒரு கணத்தில் எழுந்தோடிவந்து ஆற்றினுட் பாய்ந்து நீந்தி அவ்வீரனைப்பற்றிக் கரைகொண்டுபோய்ச் சேர்த்து அவன் வயிறு நிறையத் தண்ணீரையருந்திப் பிரஞ்ஞையின்றிக் கிடப்பதைப்பார்த்து அவனைத்தரையில் மணல் மீது உருட்டியும் அவன் உடம்பைச் சூடுண்டாம்படி தேய்த்தும் அவனுக்குப் பிரஞ்ஞைவரப் பண்ணினன். அவ்வீரன் தனக்குப் பிரஞ்ஞை வந்ததும் எழுந்து தனக்குஉயிருதவிபுரிந்த உத்தமனைநோக்கி,"ஐயா உம்மைப்பார்த்தால் இந்துவாகக்காண்கின்றதே! மகமதியன் தீண்டிய கையையும் வாங்கிவிடவேண்டும் என்பதல்லவா இந்துக்களுடைய கொள்கை. அப்படியிருக்க நீர் எப்படி என்னைத்தீண்டி எடுத்து உயிர்ப்பிக்க முயன்றீர்? உமக்குத் தேவன் பூர்ணகிருபை செய்வாராக" என்ருன். அதற்கு வள்ளுவன்,"ஐயா, நானேர் பறையன். எல்லாரினும் கீழ்ப்பட்டவன். எனக்குத்தீட்டுமில்லை ஒன்றுமில்லை. என்னுடைய பரிசத்தால் மற்றவர்களுக்குத் தீட்டுவந்தால் உண்டு. தாம் ஆற்ருேடே போவதைப் பார்த்தும் நான் தொடலாமா கூடாதா என்பதைக்கூடக் கவனிக்க எனக்கு அவகாசமில்லை. ஆத்திரமாக வீழ்ந்தெடுத்து வந்தேன். இது தப்பிதமாக இருந்தால் என்னை மன்னிக்கும்படி மிகவும் கெஞ்சிக்கேட்டுக்கொள்ளுகிறேன்" என்ருன். அதற்கவ்வீரன்,"பரவா இல்லை, பரவாஇல்லை, எனக்கு எல்லாரும் சரி. நான் ஒரு முகமதியன். எனக்கு கீழ்குலத்தார் மேற்குலத்தார் என்ற வித்தியாசம் கிடையாது. எனக்கு இப்போது மிகவும் களையாக இருக்கின்றது. என்னை உம் வீட்டுக்கழைத்துப் போய் ஏதேனும் ஆகாரம் தந்து புசித்தால் நலமாக இருக்கும் என்றுரைத்தா

ன். வள்ளுவன் அதைக்கேட்டதும் தன் வீட்டினுள் நுழைதற்கும்கூடத் துணியும் ஜாதியார் இப்பூமண்டலத்தில் இருக்கின்றீர்களே! என்று சிறிதுதிருப்தியும் ஈசனுல் சிருஷ்டிக்கப்பட்ட ஓர் மனிதப்பிராணிக்கு அப்படிப்பட்ட சமயத்திலும்கூட ஏதேனும் தந்துபசரிக்கக் கூடாத சீர்ப்பாக்கிய நிலையில் தானிருக்க நேர்ந்திருந்ததுபற்றி அதிகவருத்தமும் உடையனுய், "ஐயா நானோர் தரித்திரன்; என் மனைவி மக்களும் நானும் அன்னத்தைக் கண்ணில் பார்த்து மூன்று நாளாகிவுட்டது. அவர்கள் எழுந்துவரவும் திராணியின்றிக் குடிசையுட் படுத்துக்கிடக்கின்ருர்கள். ஆதலால் தங்களை என்குடிசைக்கழைத்துப்போவதில் சிறிதும் பயன் இல்லை. வேறேதாவதோர் இடத்தைக்குறிப்பிட்டால் சந்தோஷத்துடன் தங்களை அழைத்துக்கொண்டுபோய் விட்டுவர சித்தமாக இருக்கின்றேன்" என்றுரைத்தான். அதற்கு அவ்வீரன் "எனக்குவேறெங்கும்போக இஷ்டமில்லை உம்முடைய குடிசைக்கே அழைத்துச்செல்லும் குடிசையில் ஒன்றுமில்லையே என்று வருந்தவேண்டாம். என் குதிரை நீந்திக்கரை சேர்ந்திருக்கும் என்பதுறுதி. அதன்மீதுள்ள மூட்டையில் ஆகாரத்துக்கு வேண்டிய எல்லாப்பொருள்களும் இருக்கின்றன. அக்குதிரை இங்குதான் எங்காவது நின்றுகொண்டிருக்கும். என்னைக் கொண்டுபோய் உம்முடைய குடிசையில் படுக்கவைத்துவிட்டு அதைத் தேடிக்கொண்டுவருவீராஞல் எல்லாக்காரியங்களுக்கும் அனுகூலமாக இருக்கும்"என்ருன். வள்ளுவனும் அதற்கிசைந்து அவ்வீரனைத்தன் குடிசைக்கழைத்துச் சென்ருன். தெய்வச் செயலால் அக்குதிரையும் தன்மேலேற்றியிருந்த சுமையுடன் அக்குடிசையண்டையிலேயேதான் மேய்ந்துகொண்டிருந்தது. வள்ளுவன் அச்சுமையையும் இறக்கித் தன் குடிசையுட் கொண்டுசென்ருன். அம்மகமதிய வீரன் குடிசையினுட் புகுந்ததும் அவ்வள்ளுவனது மனைவி மக்கள் அன்னுகாரமின்றிச் சோர்ந்து அசைவற்றுக்கிடக்கும் பரிதாபக்காட்சியைக்கண்டான். கண்டதும் மிக வருந்தித்தன் மூட்டையிலிருந்துதிராக்ஷமதுவை எடுத்து அப் பெண்ணுக்கும் குழந்தைகளுக்கும் கொஞ்சம் கொஞ்சம் வார்ப்பித்தான். அதனுல் அவர்களனைவரும் களைப்பு நீங்கி எழுந்தார்கள். பின்னர்த்தானும் சிறிதருந்தி வள்ளுவனுக்கும் சிறிது தந்தான். இவ்வாறு எல்லாருடைய களைப்பும் ஒருவாறு தீர்ந்தபின் அவ்வீரனுடைய குறிப்பின்படி அவனது மூட்டையிலிருந்த அரிசியை எடுத்து வள்ளுவனுடைய மனைவி சமைத்து அனைவர்க்கும் படைத்துத் தானும் உண்டாள்.

அவ்வீரன் குடிசை சேர்ந்த சிறிதுநேரத்துக்கெல்லாம் சில வீரர்கள் அதிவேகமாக வந்து ஆற்றின்வெள்ளப் பெருக்கைக் கண்டதும் உள்ளே இறங்கமனமின்றி வந்த வழியே திரும்பிப் போய்விட்டார்கள். அன்று சாயந்திரமே இம்மகமதிய வீரனுக்குச் சுரங்கண்டது. அது நேரத்துக்குநேரம் அதிகரித்துக்கொண்டே வந்தது. சிற்சில சமயங்களில் பிரஞ்ஞையும் இன்றிக் கிடந்தான். இந்நோயானது அவனை அநேகநாள்வரை உபத்திரவித்துக் கொ

ண்டிருந்தது. வள்ளுவனும் மனைவியும் அம்மூட்டையிலிருந்த அரிசி முதலிய சாமக்கிரியைகள் தீரும்வரை அவற்றைக் கொண்டு சமைத்து அவ்வீரனுக்கும் படைத்து தாங்களும் உண்டுவந்தார்கள். அவை தீர்ந்ததுமுதல் வள்ளுவன் அவ்வீரனுடைய பையிலிருந்து பணம் எடுத்துச் சாமான்கள் வாங்கிவந்து வேளா வேளைகளில் தக்கபடி பத்தியம்செய்து போட்டுப் பராமரித்துவந்தான். அன்றன்று வேண்டிய சாமான்களுக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவே அன்றி அதிகமாக ஒருபையளவுங்கூட வள்ளுவன் கையாடியதில்லை. கடைசியாக அவ்வீரனும் சொஸ்தமடைந்தான். சொஸ்தமடைந்ததும் வள்ளுவனும் அவனது மனைவியும் இராப்பகல் தூக்கமின்றித்தனக்குப் பணிவிடை புரிந்துவந்த பெருந்தன்மைக்காக அவர்களை வாழ்த்தினன். வள்ளுவனும் அதற்குப்பிரதியாகச் சொல்லவேண்டிய உபசாரத்தைக் கூறிவிட்டு அவ்வீரனுடைய பணப்பையைக் கொண்டுவந்து கொடுத்துத் தான் செலவிட்டிருந்த பணத்திற்கெல்லாம் கணக்கொப்புவித்தான். அதைக்கேட்டதும் அவசியமாக இருந்ததற்குமேல் ஒரு பைசாகூட அதிகமாக அவ்வள்ளுவன் செலவழித்திராத உண்மையைக்கண்டு அம்மகம்மதியன் அதிக மகிழ்வடைந்தான். அவன் தன் நோய் தீர்ந்த பின்னுங்கூடப் பலநாள்வரைத் தன் தேகதிடம் எய்துதனிமித்தம் அக்குடிசையிலேயே தங்கியிருந்தான். அக்காலத்தில் அவன் தன்னை இருத்தி உபசரித்த தம்பதிகளின் குணாதிசயங்களை நன்கு கவனித்து அவர்கள் பழுதற்ற நற்குண நற்செய்கைகள் நிறைந்தவர்கள் என்பதைக் கண்டறிந்தான். தான் வந்தபோதிருந்ததைவிட இப்போது அவர்கள் கொஞ்சம் உடம்புந் தேறி முகமும் செழித்திருந்தார்கள். குழந்தைகளும் நன்முகச் செழிப்புற்றிருந்தன. அக்குழந்தைகளுள் மூத்தது அஹல்யா என்ற பெண்குழந்தை. அதற்கு அப்போது வயது இரண்டுமூன்றிருக்கும். நல்ல ரூப லாவண்யத்துடன் கூடி விளங்கியது. பக்குவகாலத்தில் திவ்விய சவுந்தர்யத்துடன் விளங்கும் என்பது அப்போதே தோற்றியது.

ஒரு நாள் அம்மகம்மதியவீரன் ஒரு சிறிய புகையிலைத்துண்டை வாழையிலையிற் சுற்றியாக்கிய சாதாரணச் சுருட்டைக் குடித்துக்கொண்டு வள்ளுவனண்டை உட்கார்ந்திருந்தவன் அவனை நோக்கி "உயிருதவி புரிந்த உத்தம, நான் சீக்கிரத்தில் இதைவிட்டுப் புறப்பட உத்தேசித்திருக்கின்றேன். இதுவரை இக்குடிசை எனக்கேற்ற அடைக்கலத்தானமாக இருந்தது. பறையன் குடிசையில் பதுங்கியிருப்பேன் என்று கருத ஒருவருக்கும் காரணமில்லாமையின் என் பகைவர்கள் கைக்கு நான் இதுவரை அகப்படவே இல்லை. நான் நோயாய்க்கிடந்தபோது நீரும் உமது மனைவியும் செய்த சிகிச்சோபசாரங்களை நான் ஒருபோதும் மறவேன். அவ்வன்புக்குப் பிரதியுபகாரம் செய்யவோ என்னால் இப்பொழுதே இயலாது. என்ன செய்தால்தான் அதற்குப்பிரதியாகப் போகின்றது?" என்றான். அதற்கு வள்ளுவன் உடனே "ஐயா, தாங்

ளென்ன அப்படிச் சொல்லுகின்றீர்கள்? என்றன் ஊழியத்துக்குப்பிரதி அப்பொழுதே ஆகிவிடவில்லையா? கருணாகரக்கடவுளின் கிருபாவிசேஷத்தால் தாங்கள் இக்குடிசையினுட் பிரவேசித்திராவிட்டால் நானும் என் மனைவி மக்களும் உயிரிழந்து மூன்றுமாதமாகியிராதா? உங்களுக்கு ஊழியம் செய்யும் பாக்கியம் கிடைத்ததால் அல்லவா இதுவரை உயிர்த்திருக்க நேர்ந்திருக்கின்றது" என்றுரைத்தான். பின்பு அவ்வீரன் "ஐயா, நீர் உம்முடைய பிரயாசையைச்சிறிதும் கவனியாது ஆற்றினின் றெடுத்துவந்துநோயினும் இறவாது போற்றிவளர்த்த மனிதன் இன்னானென்று உமக்குத்தெரியுமா?" என்றான். அதற்கு வள்ளுவன் "எனக்குத்தெரியவுமாட்டாது. தெரிந்துகொள்ளவும் நான் முயல்வதில்லை. 'கடவுளால் உண்டாக்கப்பட்ட ஓர் மனிதனை உயிர்ப்பிக்க என்னால் ஆனவரை முயன்றேன்' என்ற அவ்வளவே எனக்குப் போதுமானது. நீர் யாரோ? உம்முடைய நிலைமை என்னவோ? இந்த விசாரமெல்லாம் எனக்கென்னத்துக்கு? ஆனால் நீர் எனக்கு அன்னதாதா. அப்பஞ்சகாலத்தில் உம்முடைய உதவியிருந்திராவிட்டால் நான் இதுவரை உயிர் தரித்திருக்க முடியாது. என் மனைவிமக்களும் அன்றே உயிர் மடிந்திருப்பார்கள். எங்கள் அனைவர் உயிரையும் காப்பாற்றியவர் நீரே. உம்முடைய உபகாரத்தை நான் ஒருபோதும் மறவேன்" என்றான். பின்பவ்வீரன் "நான் நாளைய தினம் இவ்விடம்விட்டுப் புறப்படுவதாக இருக்கின்றேன். இச்சமயத்தில் என்னை இன்னானென்று உங்களுக்கு அறிவிக்கவேண்டுவதவசியம். நான் உமாயூர் சக்ரவர்த்தி. எனக்கு விரோதமாகக் கிளம்பிய கலகக்காரனால் என் சிம்மாசனத்தை இழந்தோடி வந்துவிட்டேன். அதை மீட்டும் கைக்கொள்ளும் வரை வேறெந்த அரசனுடைய சார்பிலாவது இருக்கவேண்டும்" என்றான். சக்ரவர்த்தி என்ற பெயர் கேட்டவுடன் அவன் முன்பாக வள்ளுவனும் அவன் மனைவியும் சாஷ்டாங்கமாக வீழ்ந்தார்கள். உடனே சக்ரவர்த்தி "எழுந்திருங்கள். உங்களுக்குப் பாக்கியம் உண்டாகக்கடவது. இம்மோதிரத்தையும் பணத்தையும் ஏற்றுக்கொள்ளுங்கள். இவற்றால் உங்கள் தரித்திரம் ஹதமாகக்கடவது" என்றுகூறித் தன் கையில் அணிந்திருந்த விலைமதிக்க முடியாத ரத்தினமோதிரத்தையும் தன் பையிலிருந்து இரண்டாயிரம் ரூபாய் பெறுமானபொன்னாணயங்களையும் எடுத்து அன்புடன் அவர்கட்குத்தந்தனன். இவைகள் அக்குடும்பத்துக்கு மிகப்பெரிய ஆஸ்தி என்பதில் என்னதடை? அவற்றை அவர்கள் ஆனந்தக்கண்ணீருடன் ஏற்று மகிழ்ந்தார்கள். உமாயூர் சக்ரவர்த்தியும் அப்போது நல்லதேகதிடம் அடைந்துவிட்டமையினால் அடுத்தநாட் காலையில் அதிக ஆராமையுடன் அக்குடிசையைவிட்டுப் புறப்பட்டுத் தன் குதிரையின் மீதேறிச் சென்றார்.

(இன்னும் வரும்.)

திருச்சிற்றம்பலம் பிள்ளை.

REVIEWS OF BOOKS.

புத்தகக்குறிப்புக்கள்.

ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம். இதனை யாக்கியோர் மகேசகுமாரசர்மா. இதில் ஸ்ரீராமகிருஷ்ணதேவர் படமும் சரிதமும் கதாம்ருதமும் அடங்கியிருக்கின்றன. கதாதரர் என்ற இவர் 1833ஷு பிறந்து 54 வருடம் வாழ்ந்து 1886-ஷு ஆகஸ்டுமீ 16உ பரப்பிரமத்தில் இரண்டறக் கலந்தனர். இவர் காளிகோயிற்பூசாரி. கல்விமானல்லர், பக்திமானே! பொன்னைமாதரைப்பூமியை நாடாதவர். மதுராநாதன் கொடையைக் கண்டு கண்ணீர் சொரிந்தனர். அவனுடன் ஸ்தலயாத்திரை செய்தனர். காளியின் அனுக்கிரகமுள்ளவரன்றி ஒரு பிராமணயோகினியிடம்சமாதிநிஷ்டைகளைக் கற்று அப்பியசித்தனர். எல்லா மதங்களும் பரப்பிரமம் ஒன்றையே கூறுகின்றன வென்ற வுணர்ச்சி நிறைந்தவர். இவருடைய பெருமையை கல்குத்தாவில் வெளிப்படுத்தியவர் கேசவசந்திரஸேநர்; உலக மறியச்செய்தவர் இவர் சீடராகிய விவேகாநந்தர். இவர் மனைவி இன்றும் காஸ்மீரத்தி லிருக்கின்றனள். தன் பர்த்தாவண்டையிலிருந்து கைங்கரியஞ் செய்துவந்தனளாதலின் 'பொன்னிறம்பெற்று நாயகனைத் தெய்வமாகவுங் குருவாகவுங் கருதி அதிகபக்தி விசுவாசத்துடன் காலங்கழித்து' வருகின்றனள். இத்தேவியின் பெயர் சாரதாமணி. பெண்மணிகள் இம்மாதுசிரோமணி யொழுக்கத்தைப் பின்பற்றுவாராளுல் முத்தி பெறுவர். கதாமிருதசுருக்கத்தில்கல்விஅலங்காரத்தைப்பற்றியமூன்றுமத்தியாயத்தையும், சாதனத்தின்பிரயோசனத்தை விளக்கக் காட்டியுள்ள நான்காமத்தியாயத்தையும் தமிழபிமானிகள் வாசித்துப்பயனடைவர் என்று எண்ணுகிறோம். இப்புத்தக நடை யெளிதே. வாசிப்பவர் இன்பம் பெறுவர். வடமொழிப்பதங்கள் மிகுந்து விரவாதிருந்தால் தமிழ்மட்டுங் கற்றவருக்கு இப்புத்தகம் அதிக உபயோகமா யிருக்குமென்பதற்கு ஐயமில்லை. **உபதேசரத்தினமாலை** யென்ற இரண்டாம் பாகத்தில் தமிழில் வழங்கிவரும் வடமொழிப் பதங்களைத் தமிழெழுத்தில் வரைந்தும் வடமொழிப்பதங்களை இன்றியமையாத விடங்களில் மட்டு முபயோகித்தும் நூலை அனைவரும் வாசித்தறியுமாறு ஆக்கியோர் வெளிப்படுத்துவரென்று நம்புகிறோம். புத்தகவிலை, அணா 6. சென்னை ரிப்பன் புத்தகசாலையில் விலைக்குக் கிடைக்கும்.

பெரியாழ்வார் கால நிருணயம். மதுரைத்தமிழ்ச்சங்க வித்துவானும் செந்தமிழ்ப் பத்திரிகையின் பத்திராசிரியருமான ம-ா-ா-ஸ்ரீ இராகவ ஐயங்காரவர்களே இதன் கர்த்தர். இவர் பன்னிரு ஆழ்வார்களில் எட்டாவதான பெரியாழ்வார் காலம் கி. பி. எழா நூற்றுண்டின் பிற்பகுதியும் எட்டா நூற்றுண்டின் முற்பகுதியுமென்று தக்கவாறு ஆராய்ச்சி செய்து மேற்கோள் காட்டி நிருணயஞ் செய்துளர். நெல்வேலி வெற்றிவேலனாகிய பாண்டியன்

நெடுமாறன்காலத்தவர் இவ்வாழ்வாராதலின்எட்டா நூற்றுண்டின் முற்பகுதியில் நெல்வேலி யுத்தம் நடந்ததெனச் சாதனங்கள் நிரூபிக்கின்றபடியால் இவரும் அக்காலத்தவரென்றே உறுதியாய்ச் சொல்லலாம். அன்றியும், எழா நூற்றுண்டே "சைனரும், பௌத்தரும், சைவரும், பிறரும் தம்முண் மாறுபட்டுச் சமயப்பெரும்போர் புரிந்த காலமென்பது சரிதக்கண்ணுல் நோக்குமிடத்து விளங்காநிற்கும். இக்காலத்துக்கு முன்னும் பின்னும் கொடிய சமயவாதம் அவ்வளவு செறிந்து நிகழ்ந்ததாகக் காண்டல் அரிது. இந் நூற்றுண்டே நம்மாழ்வார் பெரியாழ்வார்கட்கு உரியதென்பதனை நன்கு விளக்க, நம்மாழ்வார், 'இலிங்கத்திட்ட புராணத்தீருஞ் சமணருஞ்சாக்கியரு, மலிந்துவாது செய்வீர்களா மற்றுநுந்தெய்வமுமாகி நின்றுன்' என 10-ம் திருவாய்மொழி 4-ம் பாசுரத்தில் தங்காலத்து மிகுந்து மதப்போர் புரிந்து நின்ற சமயவாதியரை முன்னிலைப்படுத்துக் கூறியதும், விஷ்ணுசித்தர் பாண்டியன் முன்பு பல சமயவாதியரை வாதில் வென்றுர் என்னும் பெரியாழ்வார் சரித்திரமுமே போதியனவாம். இச்சிறுபுத்தகத்தின் விலை அணு 2. வேண்டியவர்கள் சங்கப்புத்தக சாலையிற் பெறலாம்.

திருநாவுக்கரசு. இப்பெயர்பூண்ட மாதாந்தப்பத்திரம் திருநெல்வேலியில் ஜெனவரி மாதமுதல் பிரசுரமாகி வருகின்றது. இதன் பத்திராதிபர் ஹிந்துகாலேஜ் தலைமைத்தமிழ்ப் பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ சிவராமபிள்ளையவர்கள். சைவர்கள் பெரும்பாலும் அபிமானிக்கத்தக்கது. எமக்கனுப்பிய முதற்பத்திரத்தில் பெயர்க்குக் காரணங்காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் நடாத்தும் பத்திரிகையாதலால் அதன் நடை பண்டிதர் விரும்புஞ் செந்தமிழ் நடையேயென்பது சொல்லாமலே விளங்கும். சைவமதக் கொள்கைகளை விரித்துவிளக்குவதுடன் குறைபாடுகளையும் நீக்கமுயன்றுல் நலம். தத்தமதமே பெரிதென்று ஆர்ப்பரித்தல் சிறப்பன்று.

EDITORIAL NOTES.

பத்திராதிபர் குறிப்புக்கள்.

ஆங்கிலக் கல்விகற்ற இந்தியர்களிடம் பெரியோர்வணக்கமும், இராஜவிசுவாசமும், ஜனங்களின் மதிப்பும் இல்லையென்ற தப்பான அபிப்பிராயம் ஆங்கிலேயருக்குள் பரவி வருகின்றது. காரணம் என்னை? ஆங்கிலக்கல்வியால் தேசவரசாட்சி இன்னதென்றும் அரசவுரிமை கடமையின்னதென்றும் இத்தேசத்தவர்கள் அறிந்து சிற்சில சுதந்தரங்களை பயிரங்கமாகக்கேட்கத் துணிந்தனர். பசிப்பிணி பொறுக்காமல் வாய்விட் டலறினுல் மரியாதைக்கு குறைபோலும். மேற்றிசையார்போன்று பணத்தைச் செலவிட்டு கல்வி கற்றுவந்த எமக்கு ஏதேனும் தக்க உத்தியோகம் கூர்ந்து தருக என்றுவாதித்தால் அது இராஜவிசுவாசத் துரோகம்போலும். கல்லாத நாகரீகமற்ற சுதேசிக

ளுக்கு கற்று நாகரீகமுற்ற சுதேசிகளைக்கண்டால் அருமை. அதிலும் சரஸ்வதி கடாக்ஷம் பெருத பொருளாளிகள் பலருக்குப் பொருமை மிகுதி. இவர்கள் ஆங்கிலேயரைக்கண்டால் ஐயாயிர மைல் ஓடுவார்கள். ஐந்து லக்ஷம் தடவை கீழேவிழுந்து நமஸ்காரஞ் செய்வார்கள். பொருள் படைத்தும் புத்திபடையாத பெருந்தவற்ருல் இவர்கள் கற்ரோரைக்குறைகூறுதல் வழக்கம். இருவகுப்பாரையுங்காணும் ஐரோப்பியருக்கு வித்தியாசம் அங்கைநெல்லிக்கனி போன்று விளங்கும். இதுதான் ஜனங்கள் மற்றவர்களை மதிக்கவில்லை என்ற நியாயம்போலும்!

*

சர்வகலாசாலைகளின் சட்டத்தால் இனி உயர்தரக்கல்வி இந்தியருக்குக்கிட்டுதல் சாத்தியமன்று. கற்ருலும் பயனடையார்கள். ஏனெனில் ஐரோப்பியர்களும் அவர் இரத்தங்கலக்கப்பெற்றவர்களுமே முன்னுக்குவர ஏதுவுண்டு. அவர்களுக்கே உயர்ந்த அலுவல் கிடைக்கும். கலப்புப்பிறவிகளுக்குத்தமிழ்த்தெரியும். ஐரோப்பியர்களும் தமிழ் கற்றுவருகின்றனர். ஆதலால் தமிழ் முதலிய சுயபாஷைகளைக்கற்ற பிறரும் ஏராளமாக அலுவலுக்கு வருவர். இவ்விடுக்கண்களனைத்தையும் வென்று இந்தியர் கலைகளைக்கலக்கிக் குடித்தாலும் உத்தியோகத்திற்கு போட்டிப்பரீட்சை விசேடமன்று என்ற விதி வந்துவிட்டது. இனி மேற்றிசையாளர் மனம்போல் தலைவணங்கிப் பாதபூசை செய்யும் இந்தியர் மட்டுமே நல்ல நிலைமைக்கு வரக் கணக்காணலாம்.

*

தங்குல தெய்வங்களாகக் கொண்டாடப்படும் ஜெப்பானியர் மூமராம், மார்க்குவெஸ் ஐற்ரோவும் மார்ஷல்யாமகாடர்வும் மேனுட்டு நாகரீகத்திற்சிறந்தவர். கவுண்டொகுவாவோ சுயஞ்ஜெப்பானியர். மூவரும் பெருத்த தேசாபிமானிகள். சமயோசிதக்கடசித்தலைவர் ஐற்ரோ. யாமகாடா உள்ளபடி நிற்றலே தகுதியென்பர். ஒகுவர்சீர் திருத்தக்கட்சிச் சிரேட்டர்.

*

ஒகுவா பேச்சில் சதுரர். ஆவேசங்கொண்டு சரமாரி பொழிவர். தந்தேசத்தில் மேனுட்டுக்கலைகளைப் பரப்புவதில் பொருட் செலவுசெய்யச் சளையார். ஐற்ரோப்பிரபு ஜெப்பானியர்களை இராஜதந்திர நிபுணர்களாக்க முயலுகின்றனர். மார்ஷல்யாமகாடா அவர்களைப்பெரிய இராணுவ வீரர்களாகச் செய்ய உழைப்பெடுப்பர்.

*

சங்கீதப்புலியாகிய சரபசாஸ்திரிகளும் தேகவியோகமாயினர். சங்கீதக்கட்சியில் ஒன்றின் தலைவர் சென்றது சங்கீதப் பயிற்சிக்குப் பெருங்கேடே.

*

பிரபல தமிழ் வித்வான் சிதம்பரம் மு. சாமிநாதய்யரவர்களும் சித்திரைசஷ்டியில் மறைந்தனர். இவர் சிறந்த பிரசங்கி, முறையாகக் கற்றுணர்

ந்த பண்டிதர். மாணுக்கர்களின் உள்ளங்கவர் கள்வர். திருப்பாதிரிப்புலியூர் மடாதிபதி சிவசண்முகமெய்ஞ்ஞான தேசிகரவர்களின் பிரியாத்துணைவர். ஜமீன்களிலும் ஆதீனங்களிலும் பாண்டித்தியத்திற்காகப் பரிசு பெற்றவர். கூடலூரில் செயிண்டு ஜோஸப் கல்லூரியில் தமிழ்ப்பண்டிதராயிருந்தவர். இவர் ஏதேனும் நூலாக்கியுளரோ அறியேம்.

*

திருநெல்வேலியில் **ஆத்மசம்ரக்ஷிணி** என்ற பத்திரிகை இரண்டு வருடங்கட்குமேற்பட்டு நடந்துவருகின்றது. நன்கறிந்த தமிழர்விஷயதானஞ்செய்து வருகின்றனர். சீர்பெற்றுவரும் இப்பத்திரிகை மாதம் இருமுறை வெளியாகின்றது. இதன் பத்திராதிபர் இதை வாரமொருமுறையாயினும் வெளிப்படுத்த முயற்சிப்பாராஞல் நலம். அங்ஙனஞ்செய்யும் பக்ஷத்தில் சந்தாவைச்சிறிது உயர்த்தலாம். ஆங்கிலத்தில் எதையும் போடாதிருத்தலே தமிழபிமானிகள் விரும்புவர்.

*

பாளையங்கோட்டையில் **சர்வஜனமித்திரன்** என்று நாமங்கொண்ட வாரமிருமுறை வெளியாகும் பத்திரிகையின் முதலைந்து இலக்கங்களைப் பெற்றனம். இவற்றின் தமிழ்நடை சிறந்திருக்கின்றது. விஷயங்களும் பொதிந்துள. இவ்வாறே இப்பத்திரம் என்றும் நடக்குமாயின் சுப்பிரமணியபாரதியார் போன்று இதற்கு வாழிகூறப் பின்னடையேம். சர்வ ஜனங்களுக்கும் மித்திரனென வெளிவந்திருப்பதால் இது நாளுக்கு நாள் சீரேற்றம் பெறலாம்.

*

ஆங்கிலேயசரித்திரத்தில் மூன்று பெரும்பிழைகளுள. முதற்பிழையால் அமெரிக்காகண்டத்திலுள்ள ஐக்கிய மாகாணங்கள் பிரிந்தன. கிரிமியா யுத்தம் இரண்டாம்பிழை. போவர் யுத்தம் மூன்ருவது. இந்த யுத்தத்தால் விளையுங்கேடுகள் காலாவதியில் வெளியாகும். யுத்தமுடிந்தது; அதனாலுண்டாகிய பலவீனம் என்று தீருமோ. இஃது கார்னெகி என்ற பலகோடிப்பிரபுவின் கருத்தாம்.

*

18-வது நூற்றண்டுகளுக்குமுந்தியதமிழர். என்ற பெயர்கொண்ட புத்தகமொன்றை ஹிக்கின்பாதம் கம்பெனியார் பதிப்பித்திருக்கின்ருர்கள். இதனை ஆக்கியோர் ம-ஈ-ா-ஸ்ரீ கனகசபை பிள்ளையவர்கள். இதில் 16 அதிகாரங்களுள இவையனைத்தும் 'மெட்ருஸ் ரிவியூ' என்னும் பத்திரிகையில் வெளியாயின. அரிய பெரிய விஷயங்கள் பல இப்புத்தகத்திலுள. இது தமிழபிமானிகள் வாசிக்கவேண்டிய நூலேயாம்.

ஏஜெண்டுகள்:—தமிழ் வழங்கிவரும் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏஜெண்டுகள் தேவை. ஏஜெண்டுகளாகப் பிரிய முள்ளவர்கள் தங்களுடைய நற்சாட்சிப் பத்திரங்களை "கோயமுத்தூரிலுள்ள ஞானபோதினிப் பத்திராதிபருக்கு அனுப்பினால் அவர் பதிலெழுதுவர். வருஷந்தோறும் சந்தாதாரர்களைச் சேர்த்து சந்தாவை வசூலித்து அனுப்பும் ஏஜெண்டுகளுக்கு ரூபாய்க்கு இரண்டு அணா கமிஷன் கொடுக்கப்படும். இந்தக்கமிஷனும் மூன்று மாதங்கட்கு ஒரு தரம் ஏஜெண்டுகளுக்கு அனுப்பப்படும். குறைந்தது 10 சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்பும் ஏஜெண்டுகட்கு மாத்திரமே ஒவ்வொரு மாதச் சஞ்சிகையும் இனாமாக அனுப்பப்படும்.

தெரிந்தெடுக்கப்பட்ட ஏஜெண்டுகளின் விலாசம்.

திருநெல்வேலி ஜில்லா—Mr. T. P. **முத்து வேலுப்பிள்ளை**, சுந்தரமூர்த்தி அண்டு கம்பெனி, திருநெல்வேலி ரெயில்வே ஸ்டேஷன்.

திருநெல்வேலிப் பட்டணம்—Mr. T. V. **சிதம்பரம் பிள்ளை**, கல்லத்தி முடுக்கு, திருநெல்வேலி.

சாத்தூர்—Mr. S. A. **சோமசுந்தரம் பிள்ளை**, சாத்தூர்.

கொழும்பு—Mr. K. **பூர்ணலிங்கம் பிள்ளை**, ஆடம் ஜிவல்ஜி, கொழும்பு.

மதுரை—Mr. O. **ஆனையப்ப பிள்ளை**, பெரிய குளம், Via அம்மைய நாய்க்கனூர்.

விளம்பர விகிதம்—ஒரு வருஷத்திற்கு ஒரு பக்கத்திற்கு ரூ. 18 அரை வருஷத்திற்கு ரூ. 10 மூன்று மாதத்திற்கு ரூ. 6

ஷை அரைப்பக்கத்திற்கு ரூ. 10 ஷை ரூ. 6 ஷை ரூ. 4

ஷை மூன்றிலொரு பக்கத்திற்கு ரூ. 7 ஷை ரூ. 4 ஷை 3

இதற்குக் குறைந்த விளம்பரங்கள் அங்கீகரிக்கப்படமாட்டா. "**ஞானபோதினிப் பத்திராதிபர், கோயமுத்தூர்**" என்ற விலாசத்திற்கு எழுதிக் கொள்க.

பத்திராதிபர் புதிதாகப் பதிப்பித்த புத்தகம்.

Shakespeare's Twelve Great Heroines.

ஷேக்ஸ்பியர் பன்னிரு பெண்மணிகள்.

நல்ல கிளேஸ் கடிதத்தில் புதிய அச்செழுத்தில் பதிப்பிக்கப்பட்டது. விலை அணா 6. பத்துப்பிரதி வாங்குவோருக்கு ஒரு பிரதி இனாம். சென்னை தம்புசெட்டிதெரு, ரிப்பன் புத்தக சாலைக்கும், மவுண்டுரோடு, ஹிக்கின்பாதம் கம்பெனிக்கும் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

BY THE EDITOR

A Primer of Tamil Literature

(In English.)

Will be ready for sale in the first week of May.

Price Re. 1-0-0.

Those who register their names before the 20th April will be charged only 12 annas. Look Sharp. Apply to the Editor of this Journal.

Jnâna Bodhini.

TERMS OF SUBSCRIPTION :—

India, Ceylon, Yearly	... ...	Rs. 2—8—0
Africa, &c. ,,	... ...	5 shillings.

Terms of Agency.—Two Annas per Rupee of Subscriptions collected and remitted. A copy of the Journal will be sent free to every Agent who gets at least 10 Subscribers.

Agents are wanted in Madura, Trichinopoly, Tanjore, Kumbakonam, Cuddalore, Chidambaram, Chingleput, and Salem, Jaffna and South Africa.

Agents approved—

Tinnevelly Town—T. V. Chidambaram Pillai.
Satur—S. A. Somasundram Pillai.
Colombo—K. Purnalingam Pillai.
Tinnevelly—T. P. Muthuvelu Pillai.
Madura—Anaiyappa Pillai, Periakulam.

TERMS OF ADVERTISEMENT.

	Yearly.	Half-yearly.
One full page	... Rs. 18	Rs. 10
Half page	... ,, 10	,, 6

Apply to

The Edtor,

"Jnâna Bodhini," Coimbatore.